


இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மோதல் ஏற்பட்டால் இலங்கை எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து அரச மேல்மட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாம்.

அப்படியொரு நிலைமை ஏற்பட்டால் அணிசேரா கொள்கையை கடைப்பிடித்து நடுநிலை வகிப்பதே நல்லதென பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

இதற்கிடையில் பாகிஸ்தான் தூதரகத்துக்கு முன்னால் அண்மையில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டதையடுத்து தூதரகத்துக்கும் அதன் இராஜதந்திரிகளுக்கும் விசேட பாதுகாப்பை வழங்க அரச மேலிடம் பணித்துள்ளதாம்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்



மலர்: 05, இதழ்: 222 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை (02.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 03, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12


## கமெண்ட் கந்தர்



இந்த அரசாங்கமாவது காணி அதிகாரம் கொடுக்குமென்று பார்த்தால் இவங்க தமிழர் காணிகளை அதிகாரத்தால் பறிக்கப்பார்க்கிறாங்க...



காலிமுகத்திடல்



தலவாக்கலை



வரக்காபொல



நுகேகொடை

மே தினத்தை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தி கொழும்பு காலிமுகத்திடலிலும் ஐக்கிய மக்கள் சக்தி தலவாக்கலையிலும் சர்வஜன அதிகாரம் வரக்காபொலயிலும் பொதுஜன பெரமுன நுகேகொடையிலும் மக்கள் பேரணிகளை ஏற்பாடு செய்திருந்தன. இந்தப் பேரணிகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிருந்ததை படங்களில் காணலாம்.

# 5,940 ஏக்கர் தமிழர் நிலம் கபளீகரம்!

## சத்தம் சந்தடியின்றி வடக்கை குறிவைத்து வெளியானது வர்த்தமானி

வடக்கு மாகாணத்தில் மருதங்கேணி முதல் முள்ளிவாய்க்கால் வரை யாழ்ப்பாணம் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றின் பெரும்பாலும் கடற்கரையோரப் பிரதேசங்களை அண்டி 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரச உடைமையாக்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தால் சத்தம் சந்தடியின்றி வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்


The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

PART III — LANDS

IMPORTANT NOTICE REGARDING ACCEPTANCE OF NOTICES FOR PUBLICATION IN THE WEEKLY "GAZETTE"

# பகிடிவதையால் பல்கலை மாணவன் தற்கொலை

## விசாரணைக்கு விசேட குழுவை நியமித்தது கல்வி அமைச்சு



பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளான பல்கலைக்கழக மாணவனொருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப பொறியியலாளர் பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கல்விகற்றுவந்த 23 வயதுடைய சரித் தில்ஷான் என்ற மாணவனே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

02 பக்கம்

# தமிழ் மக்களின் நம்பிக்கையை புறக்கணியோம்!

## தேசிய சமத்துவமே முன்னேற்றத்தின் அடிப்படை என்கிறார் ஜனாதிபதி



"வடக்கு - கிழக்கில் இருக்கும் பாரம்பரிய அரசியல் அமைப்புகள், தலைவர்கள் என சகலரையும் நிராகரித்துவிட்டு...

02 பக்கம்

# அரசாங்கத்தின் பாசாங்கை பதக்கத்தால் முறியடிப்போம்

## மக்களின் அன்புக்கு இதயபூர்வமான பதில் கிடைக்குமென திலித் எம்.பி. சுட்டிக்காட்டு



"நாங்கள் திசைகாட்டியை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் பதக்கமாவோம். பொய்கூறும் இந்தத் திசைகாட்டிச் சின்னத்தால் எப்போதும் எம்மோடு போட்டியிட முடியாது. அன்புடன் கூடிய ஆதரவு எம்முடனேயே இருக்கிறது. பாசாங்குத்தனத்தை முறியடிக்கவே பதக்கம் உதயமாகியுள்ளது. மக்களை ஏமாற்றும் போலி அரசியலை தோற்கடிப்பதற்காகவே சர்வசன அதிகாரம் மக்களுடன் கைகோர்த்துள்ளது.

02 பக்கம்

# தனியார்துறை சம்பள அதிகரிப்பு சட்டமூலம் அமைச்சரவைக்கு

தனியார் துறையினருக்கான சம்பள அதிகரிப்பு சட்டமூலத்தை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்மூலம் தனியார் துறையினரின் சம்பள அதிகரிப்புக்கான யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தனியார் துறையினரின் சம்பள அதிகரிப்புக்கான சட்டமூலம் அனுமதிக்காக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக...

02 பக்கம்

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலே தே.ம.சவுக்கான சிவப்பு எச்சரிக்கை

## அணிதிரளுமாறு தலவாக்கலையில் சஜித் அறைகூவல்



எஸ்.கணேசன்

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கையை வழங்குவதற்கு மக்கள் அணிதிரள வேண்டும்" - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறைகூவல் விடுத்துள்ளார்.

தலவாக்கலையில் நேற்று (01) இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அறைகூவலை விடுத்தார். அங்கு அவர்...

02 பக்கம்

## பொஸ்பேட் கொடுக்கல் வாங்கல்:

# சிறையில் வைத்தே சாமரவிடம் வாக்குமூலம் பெற அனுமதி



நாட்டில் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அரசுக்கு 2,700 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் பொஸ்பேட் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பீ அறிக்கையினூடாக நீதிமன்றத்தின்...

02 பக்கம்

# தமிழ் ஊடகர்கள் தொடர்பில் கனடாவின் கரிசனை தொடரும்

## அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்திடம் கனேடிய தூதுவர் உறுதி



"இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தமிழ் ஊடகர் படுகொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெறவேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தங்களை வழங்க வேண்டும்"...

02 பக்கம்

## தமிழ் மக்களின்...

தமிழ் மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். அதனூடான தேசிய சமத்துவத்தின் தேவையையே அந்த மக்கள் உணர்த்துகிறார்கள். மக்கள் மீண்டும் பின்னோக்கிச் செல்ல ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அவர்களை கைவிடவும் மாட்டோம்'' என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

''நாட்டைக் கட்டியெழுப்பும் மக்கள் சக்தி அணிதிரளும்'' என்ற தொனிப்பொருளில் நேற்று (01) காலிமுகத்திடலில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''நீண்டகாலம் மே தினத்தை கொண்டாடுகிறோம். இருந்தபோதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக மக்களை அணித்திரட்டுவதையே நாங்கள் செய்திருக்கிறோம். ஆனால் இன்று அதிகாரத்தை கைப்பற்றிக்கொண்டு மக்களை அணித்திரட்டுவதற்கான பேரணியை முதல் முறையாக நடத்துகிறோம். இன்று தேசிய மக்கள் சக்தி மாத்திரமே இந்த நாட்டிலுள்ள அரசியல் வேலைத்திட்டமாகும்.

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலம் முழுவதுமாக தேசிய மக்கள் சக்தியின் கைகளிலேயே இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஏனைய எந்தவொரு தரப்பும் தற்போது அரசியல் வேலைத்திட்டங்களில் இல்லை. இருந்தபோதும் ஒவ்வொரு இடங்களிலும் குரல்கள் உயர்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அந்தக் குரல்கள் வெளிப்படும் காரணம் என்னவென்பது எங்களுக்கு தெரியும். அவர்கள் நீண்டகாலம் ஆட்சி செய்தவர்கள். அவர்கள் அதிகாரத்தை பரம்பரை ரீதியாக கைப்பற்றி வந்தவர்கள். தொடர்ந்தும் அதனை முன்னெடுத்துச் செல்ல முடியுமென்று நம்பியிருந்தார்கள்.

ஆனால் செப்டெம்பர் மாதம் நாட்டு மக்கள் துணிச்சலான முடிவை எடுத்தார்கள். அதாவது பரம்பரைகளின் கைகளில் இருந்த அதிகார வரைபடத்தை முழுமையாக அழித்துவிட்டு பொது மக்களின் கைகளுக்கு அதிகாரத்தை மாற்றுவதற்கு மக்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அதிகாரம் இல்லாமல் நம்பிக்கையின்மையின் அழுகுரல்களை கேட்கக் கூடியதாக இருக்கிறது. மறுபுறம் அதிகாரம் மூலம் மக்களின் வளத்தை வீணடித்து அதிக சலுகைகளை அனுபவித்தார்கள். பொது வாழ்க்கைக்கு அப்பாலான வாழ்க்கையை முன்னெடுத்தார்கள். மக்களுக்கு மேலாக அதிகாரத்தை பிரயோகித்தார்கள். ஆனால் இன்று பொதுச் சட்டத்துக்கு அடிபணிந்துள்ளார்கள். சலுகைகளை இழந்துள்ளார்கள். சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதனால் கவலையில் இருக்கிறார்கள்.

எங்களை விட அவர்களின் இலஞ்ச ஊழல் அவர்களுக்கே தெரியும். அதேபோன்று நாங்கள் யாரென்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அவர்களின் குற்றங்களை அறிந்து வைத்துள்ள அதே அளவுக்கு நாங்கள் யார் என்பதும் அவர்களுக்கு தெரியும். அதனால் அச்சத்தில் இருக்கிறார்கள். இவர்களின் கருத்துகளில் எந்தவொரு பொருளும் இல்லை. என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்கே தெரியாது. பிளவுபட்ட குழுக்களின் இணைப்புகளே இருக்கின்றன. அவற்றை அரசியல் வேலைத்திட்டங்களாக கொள்ள முடியாது.

எனவே, எங்களுக்கு அப்பால் வெளியில் எந்தவொரு சவாலும் இல்லை. அவை பிளவுபட்ட துண்டுகளின் ஒன்றிணைவே. சவால் அல்ல. எங்களுக்கான சவால் எங்களுக்குள்ளேயே இருக்கிறது. எங்களுக்கு அருகிலேயே சவால்கள் இருக்கின்றன. அதனால், எங்களுக்குள்ளேயே இருக்கும் எதிர்ப்புகள், பொருத்தமின்மை, புதிய நிலைமைகளுக்கமைய மாற்றமடைவதில் சிரமம் போன்றவே அவை. நாங்கள் நோக்கங்களுக்காக உரிமையை பெற்றுக்கொண்ட தரப்பினராகும். தற்போது எங்களிடம் இருப்பது நம்பிக்கையின் அதிகாரமாகும். யதார்த்தத்தின் இயல்பை புரிந்துகொள்ள வேண்டும். சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

எங்களின் பொறுப்புகளை கைவிட மாட்டோம். சமூக சமநிலையை ஒரே இரவில் உருவாக்கிவிட முடியாது. இருந்தபோதும் சமூக சமநிலைக்காகவும் நீதிக்காகவும் மிகவும் முறையாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம் என்பது சகலருக்கும் தெரியும். நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டுச் செல்வதற்கான முறையான பயணத்தை ஆரம்பித்துள்ளோம். திருட்டு இல்லாத அரசியல் தூணை ஏற்படுத்தியுள்ளோம். இந்த பலமான அத்திவாரத்துக்காக தேசிய சமத்துவம் எமக்கு மிகவும் முக்கியமாகும். தேசிய சமத்துவம் இல்லாமல் முன்னேற்றமடைய முடியாது. பாராளுமன்றத் தேர்தலில் எங்களை விட முன்னேற்ற முதலடியை மக்களே வைத்துள்ளார்கள். நாங்கள் பின்னடைவை சந்தித்துவிட்டோம் என்று எண்ணலாம். ஆனால் மக்கள் முன்னிலையிலேயே இருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது பெரும் நம்பிக்கையை வைத்துள்ளார்கள். எங்களைவிட ஒருபடி முன்னோக்கிச் சென்றுள்ளார்கள். வடக்கில் நாம் அரசியல் குறைவாகவே செய்திருக்கிறோம். கிழக்கிலும் குறைவாகவே அரசியல் செய்திருக்கிறோம். எங்களின் தொடர்பாடல் தமிழ் மொழியில் அமைவதில்லை. சிங்கள மொழியிலேயே தொடர்படுகிறோம். ஆனால் வடக்கில் பரம்பரை அரசியல் கட்சிகள், தலைவர்கள் என சகலரையும் நிராகரித்துவிட்டு அந்த மக்கள் எம்மீது நம்பிக்கையை வைத்துள்ளார்கள். அதனூடான தேசிய சமத்துவத்தின் தேவையையே உணர்த்துகிறார்கள். அந்த மக்கள் மீண்டும் பின்னோக்கிச் செல்ல ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அவர்களின் உரிமைகள், கலாசார உரிமைகள், மொழி உரிமை, காணி உரிமை, சுதந்திரமாக வாழும் உரிமை, அவர் நாட்டில் பிரஜைகளாக வாழ்வதற்கான சகல உரிமைகளையும் நிலைநாட்டுவோம். இதுவே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இரண்டாவது தூணாகும். அதற்கும் அப்பால் நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் எண்ணிக்கூட பார்க்க முடியாது.

கடந்த அரசியல் செயற்பாடுகள் பிரிவினைவாத அரசியலாகும். ஆனால் நாங்கள் அதனை மாற்றியமைத்துள்ளோம். அதற்கான அத்திவாரத்தை கட்டியெழுப்பியுள்ளோம். இதுவே எமது முன்னேற்றமாகும். பலமான அரச சேவையை ஆரம்பித்துள்ளோம். புதிய நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். சம்பள அதிகரிப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளோம். சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு மாற்றங்களை மேற்கொண்டுள்ளோம். உயர் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு தனியான சட்டமே இருந்தது. அவர்கள் சட்டத்துக்கு பயங்கொள்வதும் இல்லை. அடிபணிவதும் இல்லை. முதல் முறையாக அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் தற்போது சகலருக்கும் சமமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளோம். ஆனால் பழைய நாடு என்று எண்ணிக்கொண்டு சிலர் பல்வேறு கதைகளை கூற ஆரம்பித்துள்ளார்கள். கதை கூறிய உடனே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உடன் அழைப்பு விடுக்கிறது. அவர்கள் பழைய நாடுகள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சட்டம் சகலருக்கும் சமமானதாகும். அதனை நடைமுறையிலும் செய்து காட்டுவோம். எப்போது ஊழல் செய்திருந்தாலும் அதற்கான தண்டனை வழங்கப்படும் என்ற சமிக்ஞையை தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொடுத்துள்ளது. சட்டத்துக்கு பயங்கொள்ள வேண்டும். சட்டத்துக்கு அடிபணிய வேண்டும்'' என்றார்.

## தனியார் துறை...

தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று (01) இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உள்ளூராட்சி...

தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என அநுர அரசாங்கம் உறுதியளித்திருந்தது. ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என எமக்கு தகவல் கிடைத்துள்ளது. மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியவர்கள், இன்று மக்களை ஏமாற்றுகின்றனர்.

எனவே, இந்த அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கையை விடுப்பதற்காக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்கள் ஆதரிக்க வேண்டும். மக்களை எல்லா வழிகளிலும் ஏமாற்றிவரும் இந்த அரசாங்கத்துக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பாடம் கற்பிக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு உப்பைக்கூட பெற்றுக்கொடுக்க முடியாதவர்களே ஆட்சிபீடத்தில் உள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு அமுலில் இல்லை. பாதாளக்குழுக்கள் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளன. வீட்டுக்குள்ளும் நடுத்தெருவிலும் கொலைகள் இடம்பெறுகின்றன. நீதிமன்றத்துக்குள்கூட துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் நிலைமை காணப்படுகின்றது. காட்டாட்சியே நாட்டில் நிலவுகின்றது'' என்றார்.

## 5,940 ஏக்கர்...

2025.03.28 ஆம் திகதிய 5620 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமே இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று இப்போது தெரியவந்துள்ளது.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 319 காணிகளை உள்ளடக்கி 3 ஆயிரத்து 669 ஏக்கரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 507 காணிகளை உள்ளடக்கி ஆயிரத்து 702 ஏக்கரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 58 காணிகளை உள்ளடக்கி 515 ஏக்கரும் என மொத்தம் 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரசுடைமையாக்கப்படுகின்றது.

இவ்வாறு அரசுடைமை என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலப்பரப்பில் பலரது வீடுகள், பொது இடங்கள், ஆலயங்கள் மட்டுமன்றி பல தொழில் முயற்சி மையங்களும் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவு, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளின் கடற்கரையோரங்கள் வழியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரை இந்தப் பிரதேசங்கள் நீள்கின்றன.

இந்தப் பிரதேசங்களில் உள்ள நிலங்களில் அரச நிலம் எது, தனியார் நிலம் எது எனப் பிரதேச செயலகங்களுக்கோ அல்லது மாவட்ட செயலகத்துக்கோ அடையாளம் தெரியாத காரணத்தாலேயே இவ்வாறான அறிவித்தல் வெளியிடப்படுவதாகவும் - மூன்று மாத காலப் பகுதிக்குள் தமது காணி என்று தனியார் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அந்த நிலங்களை விடுவித்து ஏனைய நிலங்கள் அரச நிலம் என 3 மாத நிறைவில் மீண்டும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் என அப் பகுதிகளுக்கான பிரதேச செயலாளர்கள் பதிலளிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் வெளிநாட்டில் இருக்கின்றமையாலோ அல்லது உயிரிழந்திருக்கின்றமையாலோ அந்த நிலங்களுக்கு உரிய காலத்தில் உரிமை கோராவிடின் அவ்வாறான நிலங்களையும் பொதுப் பயன்பாட்டு நிலங்களையும் அரச நிலங்களாக்கும் முயற்சியாகவே இது கருதப்படுவதாக அந்தப் பகுதிகளின் நில உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை அரச காணிகளாகச் சுவீகரித்து பிற நாடு ஒன்றுக்கு வழங்க முயற்சி இடம்பெறுகின்றது என்றுபாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடந்த ஆண்டு பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியபோது அவ்வாறு எந்த முயற்சியும் இல்லை என அரசும் அதிகாரிகளும் மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் ஊடகர்கள்...

என அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸுக்கும் அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (30) கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகரின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் தே.செந்தில் வேலவர் தலைமையிலான நிர்வாகக் குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு, தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தூதுவருக்கு எடுத்துக்கூறினர்.

கடந்த காலங்களில் தமிழ் ஊடகர்கள் படுகொலை செய்யப்பட்டமை, அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் நீதியான விசாரணை இதுவரை இடம்பெறாமை குறித்து இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டிய ஒன்றிய உறுப்பினர்கள், அவற்றுக்கு நீதி தேவை என்பதை வலியுறுத்தியதுடன் அதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் வழங்கவேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இப்போதும் தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை செய்யும்போது அரசியல் உட்பட்ட பல்வேறு தரப்புகளால் அச்சுறுத்தலுக்குள்ளாவதாகவும் புதிய ஆட்சியின் கீழும் இந்நிலைமை தொடர்வதையும் தூதுவரிடம் சுட்டிக்காட்டிய ஒன்றிய உறுப்பினர்கள், மறைமுகமான சுய செய்தித் தணிக்கைக்கு ஊடகர்கள் பணிக்கப்படுகிறார்கள் என்றும் விபரித்தனர்.

தமிழ் ஊடகர்கள் தங்களின் தொழில்பயிற்சிக்கு கனேடிய அரசு இயன்றவரை உதவுமென இந்தச் சந்திப்பில் உயர்ஸ்தானிகர் வோல்ஸ் உறுதியளித்தார். அதேபோல தமிழ் ஊடகர்கள் தொழில் செய்யும்போது ஏற்படும் அவதானங்கள் தொடர்பிலும் கனடா தொடர்ந்தும் கரிசனை கொண்டிருக்கும் என்றும் அவர் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டார்.

## அரசாங்கத்தின்...

அதற்காக மக்கள் வழங்கும் அன்புடனான பதிலுக்கும் நாங்கள் இதயபூர்வமாக பலமடங்கு பதிலை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்போம்'' என்று சர்வசன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

'இருக்குமிடத்திலிருந்து முன்னோக்கி' என்ற தொனிப்பொருளில், சர்வசன அதிகாரத்தின் மே தின மக்கள் பேரணி நேற்று (01) வரக்காபொல பிரதேசத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''பழைய வேலைத்திட்டங்களை நிறுத்திவிட்டு நாட்டை தொழில்முனைவோர் இராச்சியமாக கட்டியெழுப்ப வேண்டும். உலகிலுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளைப்போன்று சிந்திக்க வேண்டும். அதன் காரணமாகவே தொழிலாளர்கள் என்ற கருத்தோட்டத்தையே முழுமையாக ஒழித்துவிட்டு தொழில்முனைவோரை போசிப்பது தொடர்பில் பேசி வருகிறோம். தேர்தலுக்கு இன்னும் குறுகிய தினங்களே இருக்கின்றன. இது மக்கள் கூட்டங்களை காட்டும் போட்டி இல்லை. மக்களை பஸ்களினூடாக கொழும்புக்கு அழைத்து வந்து, வெளிநாட்டு சகோதரர்களின் நிதியுதவியுடனும் வர்த்தகர்களின் நிதியுதவியுடனும் காலி முகத்திடலை நிரப்புகிறார்கள். இப்படி சென்றால் நாடு எவ்வாறு முன்னேற்றமடையும்.

இந்தியாவுடன் ஏழு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு அவற்றை மூடிமறைத்து வைத்துகொண்டிருக்கிறார்கள். அரச ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப் பட்டுள்ளதா என்று செல்லும் ஒவ்வொரு இடங்களிலும் கேட்பேன். அவர்களுக்கு 3000 ரூபா வரையில் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் உரிமையை பற்றி இந்த அரசாங்கம் பேசுகிறது என்றால், மக்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை சாதாரண கணக்கில் விவரிக்கலாம்.

ஒரு கிலோ அரிசிக்கான விலை அதிகரிப்பை 30 நாட்களுக்கு கணக்கெடுத்து, அதிகரிக்கப்பட்ட தேங்காய் ஒன்றுக்கான விலையை 30 நாட்களுக்கு கணக்கெடுத்து, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட சகல அத்தியாவசிய பொருட்களினதும் விலை அதிகரிப்பையும் கணக்கெடுத்தால் எவ்வளவு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிவரும் என்பது தெளிவாகப் புரியும்.

'இருக்குமிடத்திலிருந்து முன்னோக்கி' என்பதே இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எங்களின் தொனிப்பொருளாகும். இருக்குமிடத்திலிருந்து எமது கிராமங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால், இவர்கள் இருக்குமிடத்திலிருந்து பின்னோக்கியே கொண்டு செல்கிறார்கள். சகலரும் தற்போது அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி கூறும் பொய்களால் தொழிலாளர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது. ட்ரோன் கெமராக்களை வைத்து காலிமுகத்திடலை நிரப்பிவிட்டதாகக் கூறமுடியும்.

நாம் வரிசெலுத்தி உழைத்த பணத்தை வைத்தே அரசியல் செய்கிறோம். எங்களுக்கு வெளிநாட்டு சகோதரர்களும் இல்லை. தேசிய சகோதரர்களும் இல்லை. நாங்களே எங்களுக்கு தேவையானதை பெற்றுக்கொள்ளவேண்டும். எங்களாலும் மிக இலகுவாக காலி முகத்திடலை நிரப்ப முடியும். ஆனால், நிதி செலவு செய்ய வேண்டும். ஆனால், தொழிலாளர் மக்களை காலி முகத்திடலுக்கு அழைத்து வந்து அந்த பிரதேசத்தை நிரப்பி ட்ரோன் கெமராக்களில் நடிகர் நடிகைகளாகி ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

பரபரப்பு அரசியல் எங்களுக்கு விருப்பமில்லை. ஆனால், எங்களால் வேலைத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூராட்சித் தேர்தலில் இருக்கும் இடத்திலிருந்து முன்னோக்கி என்ற கருப்பொருளையும் முன்வைத்துள்ளோம். அதனூடான சர்வசன அதிகார சபையை அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். சர்வசன அதிகார சபையை உருவாக்கி அவர்களின் போலியான பாட்டாளி வர்க்க அரசியலையும் எப்போதும் அடிமட்ட மக்களை கஷ்டத்திலேயே வைத்துக்கொள்ளும் திட்டத்தையும் தோற்கடிப்போம். முன்னிலையில் இருப்பவரை வீழ்த்துவதே பாட்டாளி வர்க்க அரசியலின் கொள்கையாகும்.

மக்களை முன்னோக்கிக் கொண்டு செல்லும் கருப்பொருள் இவர்களிடம் இல்லை. மக்களை முன்னேற்றுவதென்றால் அதற்கான வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள உண்மையான பாட்டாளி வர்க்கத்துக்கு பலத்தையும் அனுபவத்தையும் ஆக்கபூர்வத்தன்மையையும் தைரியத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்காக சூழலை உருவாக்கவேண்டும். எமது மக்கள் அஸ்வெசும கொடுப்பனவுக்காக வரிசையில் செல்ல வேண்டியவர்கள் இல்லை. வறுமையில் இருக்க வேண்டியவர்களும் இல்லை. இந்தப் பூமியிலுள்ள வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்து மக்களுக்கு அதற்கான தைரியத்தையும் பலத்தையும் வழங்கினால் தானாகவே முன்னேறக்கூடியவர்களே எமது மக்கள். அவ்வாறு பலமுறை எமது மக்கள் முன்னேற்றமடைந்துள்ளார்கள். அதனை மீண்டும் செய்து காட்டுவதற்காகவே சர்வசன அதிகாரமாக மக்களை ஊக்கப்படுத்துகிறோம். நாங்களே திசைகாட்டியை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் பதக்கமாவோம். அதனால், பொய்கூறும் இந்த திசைகாட்டி சின்னத்தால் எம்மோடு எப்போதும் இந்த பூமியில் போட்டியிட முடியாது. அன்புடன் கூடிய ஆதரவு எம்முடனேயே இருக்கிறது. தீயசெயல்கள், அக்கிரமம், பொறாமை என சகலவற்றையும் அடியோடு அழிப்பதற்காகவே பதக்கம் உதயமாகியுள்ளது. பாசாங்குதனத்தை முறியடிக்கவே பதக்கம் இருக்கிறது. ஆக்கபூர்வமான இலங்கையை உருவாக்குவதற்கான தேவையான வேலைத்திட்டத்தை நாங்கள் சமர்ப்பித்திருக்கிறோம். இனிமேலும், எமது நாட்டு மக்களை மே தினக் கூட்டங்களுக்கு பஸ்களில் அழைத்து வந்து உணவுப் பொதியும் நீர்போத்தலும் கொடுத்து அவர்களை வறுமையானவர்களாக்குவதற்கு அவசியம் இல்லை.எனவே, அவர்களின் மே தினக் கூட்டத்தை அவர்களின் ஊர்களிலேயே நடத்த முடியும். அதற்கான சூழலை நாங்கள் உருவாக்குவோம். அதற்காக பலத்தையும் தைரியத்தையும் உருவாக்குவோம். மக்களை ஏமாற்றும் போலி அரசியலை தோற்கடிப்பதற்காகவே சர்வசன அதிகாரம் அதிகாரத்துடன் மக்களுடன் கைகோர்த்துள்ளது. அதற்காக மக்கள் வழங்கும் அன்புடனான பதிலுக்கும் நாங்கள் இதயபூர்வமாக பலமடங்கு பதிலை பெற்றுக்கொடுப்போம். பாட்டாளி வர்க்கத்தை கடந்துவந்த வரலாறாக்கி கிராமத்தை கட்டியெழுப்புவோம். ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தினம் மே தினமாகும்'' என்றார்

## பகிடிவதையால்...

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற புத்தாண்டு நிகழ்வின் பின்னர், மறு தினமான 28ஆம் திகதி கம்பளை, இஹலகம பிரதேசத்திலுள்ள அவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் 29ஆம் திகதி மாலை அவரின் வீட்டுக்குள்ளேயே தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

பல்கலைக்கழக புத்தாண்டு நிகழ்வின்போது குறித்த மாணவன் சந்தித்த பகிடிவதையின் காரணமாகவே அவர் இவ்வாறு தூக்கிட்டு கொண்டுள்ளதாக மாணவனின் உறவினர்களும் நண்பர்களும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனின் திடீர் மரணம், பகிடிவதையினால் இடம்பெற்றது என்பது நிரூபணமானால் அதற்கு பொறுப்புக் கூறவேண்டிய சகல தரப்பினர் தொடர்பிலும் மேற்கொள்ளவேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப விஞ்ஞான பீடம் இரண்டாம் ஆண்டில் கல்விக் கற்ற மாணவனொருவரின் திடீர் மரணம் தொடர்பில் நேற்று (01) விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு அமைச்சின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப விஞ்ஞான பீடம் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்ற மாணவனின் திடீர் மரணத்துக்கான காரணம் தொடர்பில் விரிவான விசாரணைகளுக்காக விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, விசாரணைக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அதுதொடர்பில் எடுக்கவேண்டிய சகல நடவடிக்கைகளையும் பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும். இதுதொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

''சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்றுவந்த மாணவனின் திடீர் மரணத்துக்காக காரணம் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மரணம் பகிடிவதையால் இடம்பெற்றுள்ளது என்று சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் தகவல்கள் தொடர்பில் அமைச்சு தீவிர கவனம் செலுத்தியுள்ளது. அப்படியொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது உறுதியானால் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த மாணவனின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பொஸ்பேட்...

முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தற்போது வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்திடம் சிறைச்சாலையில் வைத்தே வாக்குமூலத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில், இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அதன் ஆலோசகராக செயற்பட்ட நவீன் தனேஷ் என்பவர் நாவல பிரதேசத்தில் வைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் தொடர்பான பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, அவரின் வீட்டில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது அங்கிருந்து வெஸ்லி லண்டன் 76 ஏ, ஓ 100 என்ட் 2 வகையைச் சேர்ந்த அனுமதிப்பத்திரமில்லாத பிஸ்டெல்கள், 9 மி.மி. வகையைச் சேர்ந்த அனுமதிப் பத்திரமில்லாத பிஸ்டெல், அவற்றுக்கான 20 தோட்டாக்கள் மற்றும் எஸ்.எல்.ஜி. சீரோ வகையைச் சேர்ந்த ரிபிட்டர் வகையைச் சேர்ந்த துப்பாக்கி என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் பொஸ்பேட் நிறுவனத்தினால் சட்டவிரோதமாக 30,000 மெட்ரிக் தொன் ரொக் பொஸ்பேட் கொள்வனவு செய்வதற்காக மூன்று நிறுவனங்களுக்கு 2,700 மில்லியன் ரூபா நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் தற்போதுவரையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**ரிஷபம்** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**மிதுனம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

**கடகம்** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**சிம்மம்** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள்.

**கன்னி** தொழில் ரீதியில் பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**துலாம்** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

**விருச்சிகம்** தேவையற்ற பயணங்களால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும். உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**தனுசு** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**மகரம்** முக மலர்ச்சியுடன் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தில் வெற்றி. விண்ணப்பித்திருந்த கடன் இன்று கிடைக்கும்.

**கும்பம்** அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மீனம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| **திதி:** | பஞ்சமி மு.ப.9.14 வரை பின் சஷ்டி |
| **நட்சத்திரம்:** | திருவாதிரை பி.ப.1.04 வரை பின் புனர்பூசம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | சித்த யோகம் பி.ப.1.04 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை:** | மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை5.56 –8.56 மணிவரை காலை 9.56 – 10.26 மணிவரை பகல்12.56 – 2.56 மணிவரை மாலை 4.56 – 5.56 மணி வரை |
| **ராகு காலம்:** | 10.26 – 11.56 மணி வரை |
| **எமகண்டம் :** | 2.56 – 4.26 மணிவரை |
| **குளிகை :** | 7.26 – 8.56 மணிவரை |
| **சந்திராஷ்டமம்:** | விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 1.04 மணிவரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று பிற்பகல் 1.04 மணிக்குமேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# இளைஞன் ஒருவனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு சடலத்துக்கு தீவைப்பு

## சந்தேகநபர்கள் இருவர் கைது

இளைஞன் ஒருவனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துவிட்டு சடலத்தை தீ வைத்து எரித்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் இருவர் கல்கிஸை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கல்கிஸை - ஹுலுதாகொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹுலுதாகொட பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் இளைஞன் ஒருவன் சடலமாக கிடப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் இரத்மலானை, மஹிந்தாராமை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஆவார்.

மேலும், குடு அஞ்சுவின் போதைப்பொருள் வலையமைப்பை நடத்துபவர்களில் இவரும் ஒருவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் பெய்துவரும் கன மழை காரணமாக நிரம்பி வழியும் 24 முக்கிய நீர்த்தேக்கங்கள்



நாட்டில் பெய்து வரும் கனமழை காரணமாக, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிர்வாகத்துக் குட்பட்ட 24 முக்கிய நீர்த்தேக்கங்கள் தற்போது நிரம்பி வழிவதாக அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

அம்பாறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் தலா ஆறு நீர்த்தேக்கங்கள், அநுராதபுரத்தில் நான்கு, பதுளை, குருநாகல், மொனராகலை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தலா இரண்டு நீர்த்தேக்கங்கள் இவ்வாறு நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்களில் அடங்கும் என்று நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவற்றுடன், 16க்கும் மேற்பட்ட நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களும் அதிகப்படியான நீரை வெளியேற்றுகின்றன.

பிரதான மற்றும் நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களின் மொத்த நீர் சேமிப்புக் கொள்ளளவில் 91% க்கும் அதிகமானவை இப்போது நிரம்பியுள்ளதாக அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிகிச்சை பெற்ற விவகாரம்

## தகவல்களை வழங்குமாறு அரச - தனியார் வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு நீதிமன்றம் உத்தரவு

ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டமை தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நகர்த்தல் பத்திரத்தினூடாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்வைத்த கோரிக்கைக்கமைய கோட்டை நீதவான் நிலுப்லி லங்காபுர இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2008 முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10கோடி ரூபாவுக்கும் அதிக நிதியைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்றவிசாரணைப் பிரிவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்றுக்கொண்டுள்ளனரா என்பது குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இரண்டு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹபரண-பொலனறுவை பிரதான வீதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் பலி – 30க்கும் மேற்பட்டோர் காயம்



மின்னேரியா, மினிஹிரிகம பகுதியில் ஹபரண-பொலனறுவை பிரதான வீதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

குறித்த விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், ஹிங்குராக்கொட மற்றும் பொலனறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியப் பிரதமருக்கு எடுத்துச்சொல்ல மலையக அமைச்சர்களுக்கு தகுதியில்லை

## ஜீவன் தொண்டமான் எம்.பி. அங்கலாய்ப்பு





(பொகவந்தலாவை நிருபர்)

''மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியப் பிரதமருக்கு எடுத்துச்சொல்ல அரச தரப்பில் உள்ள மலையக அமைச்சர்களுக்கு தகுதியில்லை'' என இலங்கை தொழிலாளர் காங்ரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவை நகரப்பகுதியில் நேற்று (01) இடம்பெற்ற தொழிலாளர் தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

''இலங்கைக்கு இந்தியப் பிரதமர் அண்மையில் வருகை தந்திருந்தபோது மலைய மக்கள் தொடர்பாக ஒன்றும் பேசப்படவில்லை. அது இந்திய பிரதமரின் தவறில்லை. சிலர் ஒருகட்சிக்கு கொடிபிடித்துக் கொண்டு இருந்ததை அவதானித்தோம். அவர்கள் இன்று ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் குரங்கு கையில் பூ மாலை கொடுத்ததைபோல் இருக்கிறார்கள். 25 வயது பையன் நான். 1000 ரூபா சம்பளத்தை பெற்றுக்கொடுத்தேன். தோழர் இன்று 1,700ரூபா பெற்றுத்தருவதாக அறிவித்துள்ளார். அதனை நான் வரவேற்கிறேன். ஆனால் 1,360ரூபா அடிப்படைச் சம்பளத்தை இந்த அரசாங்கம் பெற்றுக்கொடுத்தால் எமது ஆதரவை நாங்கள் வழங்குவோம்.

பத்து இலட்சம் மக்கள் தோட்டத் தொழிலாளர்களின் அடையாளம். மக்கள் வைக்கின்ற கோரிக்கையை பாராளுமன்றத்திலும் ஜனாதிபதியிடமும் கொண்டு சேர்க்கின்றோம். மலையகத்துக்கு இன்று அங்கீகாரம் கிடையாது. நுவரெலியா மாவட்டத்துக்கு அந்தஸ்துள்ள அமைச்சு கிடையாது. அதையும் தாண்டி ஆளுமை கிடையாது. வரலாறு தெரியாதவர்களுக்கு அடையாளத்தை காப்பாற்ற முடியாது.

ஜனாதிபதியை நான் மதிக்கின்றேன். ஆனால் தலவாக்கலையில் வைத்து மலையக இளைஞர் யுவதிகள் தொடர்பில் அவர் பேசிய விடயங்களை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. கஷ்டப்பட்டு உழைத்து அவர்களுடைய பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் மலையக மக்களுக்கு கோவில் கட்டி கொண்டாட வேண்டும். தூங்குபவர்களை எழுப்பலாம். தூங்குவதை போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது. மலையகத்தை பொறுத்தவரையில், சுயமரியாதை போராட்டம் அவசியம். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் இன்று பல்வேறு துறையில் சாதித்து கொண்டு இருக்கிறார்கள்.

நாம் ஒரு சிறந்த உழைப்பாளர்கள். இந்த நாட்டில் உள்ள காடுகளை தோட்டமாக்கியதன் காரணமாகவே தான் இலவச கல்வி, இலவச சுகாதாரம் அனைத்தும் கிடைத்துள்ளது. மலையக மக்களுக்காக நான் குரல் கொடுத்தவன். ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு பிறகு நான் சென்று ஒடி ஒழியவில்லை. அன்றும் இன்றும் என்றும் நான் ஜீவன் தொண்டமான்.

தொழிற்சங்கப் பிரச்சினை, சம்பளப் பிரச்சினை ஆகியவற்றுக்கு நாங்கள் தான் குரல் கொடுக்கின்றோம். அடாவடி தனத்தை காட்டினால் எங்களுக்கும் அடாவடித்தனத்தை காட்ட முடியும். மலையகத்தில் உள்ள ஏனைய கட்சிகளை நாம் வெறுக்க வேண்டிய அவசியமில்லை. அனைவரும் எம்மிடமிருந்து திருடி கொண்டு சென்றவர்கள் காங்கிரஸ் மக்கள் பக்கமே உள்ளது. எவர் சார்பாகவும் ஆதரவு வழங்காது''என்றார்.

# மாந்தை கிழக்கில் தமிழரசு கட்சியின் பரப்புரைக்கூட்டம்

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு உள்ளூர் அதிகாரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நேற்று முன்தினம் (30) இடம்பெற்றன.

இத்தேர்தல் பரப்புரைக்கூட்டங்களில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

அந்தவகையில் மாந்தை கிழக்கு உள்ளூராட்சி பிரிவில் பனங்காமம், ஒட்டங்குளம், சிராட்டிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்குச் செலுத்தவேண்டியதன் அவசியம் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இத்தேர்தல் பரப்புரைக்கூட்டங்களில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் வ.கமலேஸ்வரன், மாந்தைகிழக்கு உள்ளூர் அதிகாரசபைக்குட்பட்ட தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுர இன்னும் நிறைவேற்றவில்லை

## இராதாகிருஷ்ணன் எம்.பி. சாடல்



(எஸ்.கணேசன்)

''தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உட்பட மலையக மக்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இன்னும் நிறைவேற்றவில்லை. ஏமாற்று வித்தையாகவே எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது'' என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று (01) இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன இணைந்து நடத்திய மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.காவினருடன் இணைந்து அறிவித்தார். ஆனால் இதுவரையில் 1,700 ரூபா கிடைக்கவில்லை.

இந்நிலையில், 1,700 ரூபா பற்றி பேசப்படும் என தற்போதைய ஜனாதிபதி கூறுகின்றார். அது எப்போது கைகூடும் என்பது தெரியவில்லை. இன்று பொருட்களின் விலைகள் எகிறியுள்ளன. இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நுவரெலியா மாவட்ட மக்கள் சஜித் பிரேமதாசவுக்கு பேராதரவு வழங்கினார்கள். நாம் என்றும் மக்களுடன்தான் இருப்போம்.

மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகம் பேசினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. உகண்டாவில் உள்ள ராஜபக்ஷக்களின் பணம் கொண்டுவரப்படும் என்றார்கள். அதுவும் நடக்கவில்லை. தேர்தல் நெருங்கும்வேளை ஏமாற்றுவித்தையாக எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது" - என்றார்.


**கொழும்பு விவேகானந்தா கல்லூரி**

VIVEKANS NETBALL LEAGUE

நூற்றாண்டு விழாவை நோக்கிய பயணத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு

**பழைய மாணவிகளுக்கிடையிலான மாபெரும் வலைப்பந்தாட்ட போட்டிகள்**

**பங்கேற்கும் அணிகள்**
- காளஸ்திகா
- ருத்ரா
- ஆர்யா
- வேலு நாச்சியார் படை
- நீலாம்பரி



**இடம்**
கொழும்பு விவேகானந்தா கல்லூரி மைதானம்

**திகதி**
04.05.2025

**நேரம்**
8.00 மணி முதல்

மாபெரும் இறுதிப் போட்டி அடங்கலாக மொத்தம் 13 போட்டிகள்

ஊடக அனுசரணை
அச்சு ஊடகம்: தமிழன், தமிழன், ஜீனியர்
இலத்திரனியல் ஊடகம்: தமிழ் 99.5 99.7

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 மே 02 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் வரி

அரிசி ஏற்றுமதியை ஒழுங்குபடுத்துவதையும் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இந்திய மத்திய நிதி அமைச்சகம் புழுங்கல் அரிசி மற்றும் உமி நீக்கப்பட்ட சில வகையான அரிசி வகைகளுக்கு 20 சதவீத ஏற்றுமதி வரியை விதித்துள்ளது. இந்த ஏற்றுமதி வரி நேற்று முதல் (மே முதலாம் திகதி) அமுலுக்கு வந்துள்ளது.

இதன்படி இந்தியாவில் உள்ள மக்களுக்குத் தேவையான அளவு அரிசி இருப்பதும் விநியோகம் தொடர்ச்சியாக இருப்பதையும் உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த வரி உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் வரி விதிப்பின் மூலம் உள்நாட்டுச் சந்தையில் விலையேற்றத்தைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் 2022 செப்டெம்பர் முதல் நடைமுறையிலிருந்த அரிசி ஏற்றுமதிக்கான அனைத்து தடைகளையும் இந்திய மத்திய அரசு நீக்கியது. அதே நேரத்தில், உடைந்த அரிசி ஏற்றுமதி மீதான தடையையும் தக்கவைத்துக்கொள்ள முடிவு செய்தது. புழுங்கல் அரிசி மீதான சுங்க வரியை 10 சதவீதத்திலிருந்து பூஜ்ஜியமாகக் குறைத்த சில மணி நேரங்களுக்குள் வெள்ளை அரிசிக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை (MEP) இரத்துச் செய்தது. உயர்மட்ட அமைச்சகங்களுக்கிடையேயான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைத் தொடர்ந்து இது முடிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா அரிசி ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தினால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படலாம். இந்தியா உலக அரிசி சந்தையில் முதன்மையான ஏற்றுமதியாளர் (சுமார் 40%) ஆகும்.

ஏற்றுமதிக் கட்டுப்பாடு காரணமாக உள்நாட்டுச் சந்தையில் அரிசி விநியோகம் அதிகரிக்கலாம். இது விலைகளைக் குறைக்க வழிவகுக்கும். இதனால் விவசாயிகளுக்கு குறைந்த வருவாய் கிடைக்கலாம். குறிப்பாக, பாஸ்மதி அல்லாத அரிசி உற்பத்தியாளர்களுக்கு நன்மைதான்.குறைந்தபட்ச ஆதரவு விலையை விட குறைவாக விற்கவேண்டிய நிலை ஏற்படலாம். இது விவசாயிகளின் நிதி நிலைமையைப் பாதிக்கும்.

உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய இந்தியா இத்தகைய கட்டுப்பாட்டை அமுல்படுத்தலாம். குறிப்பாக, பருவநிலை மாற்றங்களால் மழை குறைவு மற்றும் விளைச்சல் பாதிப்பு ஏற்படும் ஆண்டுகளில் செய்யலாம். இப்போது பாகிஸ்தானுடன் மோதல் நிலைமை ஏற்படும் சாத்தியக்கூறுகள் பற்றிப் பேசப்படும்போது இந்தியாவின் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

இந்தியா பாஸ்மதி அல்லாத அரிசியின் முக்கிய ஏற்றுமதியாளர். இதன் ஏற்றுமதி வரையறுக்கப்பட்டால், உலக அரிசி விலைகள் கணிசமாக உயரலாம். இது ஆபிரிக்கா, வளைகுடா நாடுகள் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் பாதிக்கும். 2023இல் இந்தியாவின் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டினால் அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அரிசி விலைகள் உயர்ந்தன.அவுஸ்திரேலியாவில், இந்திய அரிசி ஏற்றுமதி கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டவுடன் மக்கள் அதிகளவில் அரிசியை வாங்கிக் குவித்ததால் கடைகளில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டது. இலங்கையிலும் அரிசி இறக்குமதி குறைவால் உள்நாட்டுத் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு ஏற்பட்டது.

இந்தியாவின் அரிசி ஏற்றுமதி (குறிப்பாக பாஸ்மதி) ஆண்டுக்கு 5 பில்லியன் வருவாயை ஈட்டுகிறது. ஏற்றுமதி கட்டுப்பாடு இந்த வருவாயைக் குறைத்து அந்நிய செலாவணி கையிருப்பைப் பாதிக்கலாம். இலங்கை, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள இந்திய புலம்பெயர் சமூகங்கள் அரிசி பற்றாக்குறையால் பாதிக்கப்படலாம். அரிசி இறக்குமதியை நம்பியுள்ள ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகரிக்கலாம். இது சமூக பதற்றங்களையும் ஏற்படுத்தலாம்.

இலங்கையில் அண்மையில் கூட அரிசித் தட்டுப்பாடு செயற்கையாக உருவாக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது உள்நாட்டு வர்த்தகர்களால் மோசடிகளைத் தூண்டலாம்.இந்தியாவின் கட்டுப்பாடு காரணமாக தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகள் ஏற்றுமதியை அதிகரிக்க முயலலாம். ஆனாலும், அவை உடனடியாக இந்தியாவின் பங்கை ஈடுசெய்ய முடியாது. பாகிஸ்தான் பாஸ்மதி அரிசி ஏற்றுமதியில் முன்னேறலாம். இது இந்தியாவுக்கு சந்தைப் போட்டியை அதிகரிக்கும்.

இந்தியா அரிசி ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தினால் சர்வதேச அளவில் அரிசி விலை உயர்வு, தட்டுப்பாடு, உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் வர்த்தக பதற்றங்கள் உருவாகலாம். ஆபிரிக்கா, வளைகுடா நாடுகள் மற்றும் இலங்கை போன்ற இறக்குமதியை நம்பிய நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்படலாம். இந்திய அரசு இத்தகைய முடிவை எடுக்கும்போது உள்நாட்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் சர்வதேச உறவுகளை சமநிலைப்படுத்த வேண்டியது அவசியம்.




# இந்தியா -பாகிஸ்தான்: இராணுவப் பலம் யாருக்கு அதிகம்? அணு ஆயுதம் யாரிடம் எவ்வளவு உள்ளது?

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தானிடையிலான பதற்றம் உச்சத்தில் உள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான சிந்து நதி ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்தல், அட்டாரி-வாகா எல்லையை மூடுதல், பாகிஸ்தான் குடிமக்களின் விசாக்களை இரத்துச்செய்தல் போன்ற பல முடிவுகளை இந்தியா எடுத்தது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக பாகிஸ்தான் 1972ஆம் ஆண்டு கையெழுத்தான சிம்லா ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அறிவித்தது. மேலும் நதிகளின் நீரைத் தடுக்கவோ அல்லது திசை திருப்பவோ செய்யும் எந்த முயற்சியும் 'போர் நடவடிக்கையாக' கருதப்படுமென்றும் அதற்கு முழு பலத்துடன் பதிலடி கொடுக்கப்படுமென்றும் பாகிஸ்தான் அரசு தெரிவித்தது.

இரு நாடுகளின் அரசியல் தலைமையும் பரஸ்பரம் பதிலடி கொடுக்கும் விதமாகக் கடுமையான எச்சரிக்கைகளையும் காட்டமான கருத்துகளையும் தெரிவித்து வருகின்றன.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு முதல் தடவையாக கடந்த வியாழக்கிழமை (ஏப்ரல் 24) பொது மக்கள் மத்தியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "இந்தத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மோசமான தண்டனையைப் பெறுவார்கள்" - என்றார்.

"ஒவ்வொரு தீவிரவாதியையும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களையும் இந்தியா அடையாளம் கண்டு தண்டிக்கும் என்ற செய்தியை நான் முழு உலகுக்கும் தெரிவிக்கிறேன். எஞ்சியுள்ள தீவிரவாதிகளை மண்ணோடு மண்ணாக அழிக்கும் நேரம் தற்போது வந்துவிட்டது" - என்றும் மோடி குறிப்பிட்டார்.

"பாகிஸ்தானுக்கு ஒரு சொட்டு தண்ணீர்கூட கிடைக்காதபடி உறுதி செய்வதற்கான ஓர் உத்தி வகுக்கப்படுகிறது" - என்று இந்தியாவின் நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர். பட்டீல் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், ''இந்தியாவின் எந்தவொரு நடவடிக்கைக்கும் வலுவான பதிலடி கொடுப்பதாகத் தெரிவித்த அதேவேளை, பாகிஸ்தானின் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், "சிந்து நதிநீர் ஒப்பந்தம் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் போர் அறிவிப்பாகக் கருதப்படும்"- என்று வலியுறுத்தினார்.

***ஓய்வுபெற்ற ஜெனரல் விடுத்த எச்சரிக்கை என்ன?***

ஒரு முழுமையான பெரிய போருக்கு வழிவகுக்கும் வகையிலான இராணுவ நடவடிக்கைகளை இந்தியா எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளைப் புறந்தள்ளிவிட முடியாதென்று தெற்காசிய நாடுகளின் அரசியலைக் கண்காணிக்கும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், இராணுவ நடவடிக்கை குறித்து அவசர முடிவுகளை எடுப்பது குறித்து ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் எஸ்.எச். பனாக் எச்சரித்துள்ளார்.

"பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் கொண்ட ஒரு நாடு. இந்தியா ஏதேனும் இராணுவ நடவடிக்கை எடுத்தால், அதற்குப் பதிலடி கொடுக்குமளவுக்குப் போதுமான ஆயுதப் பலம் பாகிஸ்தானிடம் இருக்கிறது" - என்று தி பிரின்ட் செய்தி ஊடகத்துக்கு எழுதிய கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஏவுகணைகள், ட்ரோன்கள், விமானப்படை என எதுவாக இருந்தாலும், எந்த இழப்புமின்றி பதிலடித் தாக்குதலை நடத்தத் தேவையான தொழில்நுட்பத் திறன் இந்தியாவிடம் இல்லை. ஆனால், பதிலடி கொடுக்கும் திறன் பாகிஸ்தானுக்குள்ளது. ஆகையால், நாம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும்" - என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தின் தயார் நிலை குறித்து, அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிப் பி.பி.சியிடம் கூறுகையில், "நாங்கள் இனிமேல்தான் தயாராக வேண்டும் என்றில்லை. ஏற்கனவே தயார் நிலையில்தான் இருக்கிறோம். எந்தச் சூழ்நிலைக்கும் நாங்கள் தயாராகவே இருக்கிறோம்" - என்றார்.

"இந்தியா ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், 2019ஆம் ஆண்டு நடந்தது போல பதிலடி கொடுக்கப்படும்" - என்று பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் கடந்த சனிக்கிழமையன்று கூறினார்.

புல்வாமா பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, இரு நாடுகளின் விமானப் படைகளுக்குமிடையே ஒரு குறிப்பிட்ட மோதல் ஏற்பட்டபோது, பாலகோட்டில் இந்தியா நடத்திய வான்வழித் தாக்குதலைப் பற்றி அவர் இங்கு குறிப்பிடுகிறார்.

***இந்திய இராணுவத்தின் வலிமை***

இராணுவ வலிமை குறித்த 2025 ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் பாகிஸ்தான் இந்தியாவைவிட 8 இடங்களில் பின்தங்கியுள்ளதென்று குளோபல் ஃபயர் பவர் இணையதளத்தில் உள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.



உலகளாவிய இராணுவ சக்தியைப் பொறுத்தவரை, 2025ஆம் ஆண்டில் 145 நாடுகளில் இந்தியா 4ஆவது இடத்தில் இருக்கிறது, பாகிஸ்தான் 12ஆவது இடத்தில் இருக்கிறது.

இந்திய இராணுவத்திடம் சுமார் 22 இலட்சம் இராணுவ வீரர்கள், 4,201 டாங்கிகள், 1.5 இலட்சம் கவச வாகனங்கள், 100 சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள் மற்றும் 3,975 இழுத்துச் செல்லக்கூடிய பீரங்கிகள் உள்ளன. இது தவிர, 264 பீப்பாய் ரொக்கெட் பீரங்கிகளும் இருக்கின்றன.

இந்திய விமானப் படையில் 3 இலட்சத்து 10 ஆயிரம் விமானப்படை வீரர்கள், 513 போர் விமானங்கள், 270 போக்குவரத்து விமானங்கள் உட்பட மொத்தம் 2,229 விமானங்கள் இருக்கின்றன. மொத்த விமானங்களில் 130 தாக்குதல் விமானங்கள், 351 பயிற்சி விமானங்கள், 6 டேங்கர் கடற்படை விமானங்கள் ஆகியவை அடங்கும்.

இந்திய இராணுவத்தின் மூன்று பிரிவுகளும் வைத்திருக்கும் மொத்த ஹெலிக்கொப்டர்களின் எண்ணிக்கை 899. அவற்றில் 80 ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்த வல்லவை.

இந்திய கடற்படையில் 1.42 இலட்சம் கடற்படை வீரர்கள் உள்ளனர். மேலும் 2 விமானம் தாங்கிக் கப்பல்கள், 13 டெஸ்ட்ரோயர் எனப்படும் அழிக்கும் கப்பல்கள், 14 போர்க்கப்பல்கள், 18 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 18 சிறிய போர்க் கப்பல்கள் உட்பட மொத்தம் 293 கப்பல்கள் உள்ளன.

தளபாட வசதிகளைப் பொறுத்தவரை, இந்திய இராணுவத்திடம் 311 விமான நிலையங்கள், 56 துறைமுகங்கள், 6.3 மில்லியன் கிலோமீற்றர் நீளத்துக்கு வீதிகள் மற்றும் 65,000 கிலோமீற்றர் ரயில் பாதைகள் இருக்கின்றன.

***பாகிஸ்தான் இராணுவத்தின் பலம்***

குளோபல் ஃபயர் பவர் இணையதளத் தரவுகளின்படி, பாகிஸ்தான் இராணுவத்தில் சுமார் 13.11 வீத இலட்சம் இராணுவ வீரர்களும், 1.24 இலட்ச வீத கடற்படை வீரர்கள் மற்றும் 78 ஆயிரம் விமானப்படை வீரர்கள் உள்ளனர்.

பாகிஸ்தானிடம் மொத்தம் 1,399 விமானங்கள் உள்ளன, அவற்றில் 328 போர் விமானங்கள், 90 தாக்குதல் வகைகள், 64 போக்குவரத்து விமானங்கள், 565 பயிற்சி விமானங்கள், 4 விமானம் தாங்கிக் கப்பல்கள், தாக்குதல் நடத்தவல்ல 57 ஹெலிக்கொப்டர்கள் உட்பட 373 ஹெலிக்கொப்டர்கள் ஆகியவை அடங்கும்.

மேலும், அந்நாட்டு இராணுவத்திடம் 2,627 டாங்கிகள், 17,500 வாகனங்கள், 662 சுயமாக இயக்கப்படும் பீரங்கிகள், 2,629 இழுத்துச் செல்லப்படும் பீரங்கிகள் மற்றும் 600 மல்டிபேரல் ரொக்கெட் பீரங்கிகள் ஆகியவை இருக்கின்றன.

பாகிஸ்தான் கடற்படையிடம் 9 போர்க்கப்பல்கள், 9 சிறிய போர்க் கப்பல்கள் (corvettes), 8 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 69 ரோந்துக் கப்பல்கள் உட்பட மொத்தம் 121 போர்க் கப்பல்கள் உள்ளன.

தளபாடங்களைப் பொறுத்தவரை, பாகிஸ்தானிடம் மூன்று துறைமுகங்கள், 116 விமான நிலையங்கள் மற்றும் 60 வணிகக் கப்பல் படை மட்டுமே இருக்கின்றன. இது தவிர, 2 இலட்சத்து 64 ஆயிரம் கிலோமீற்றர் வீதிகளும் 11 ஆயிரத்து 900 கிலோமீற்றர் ரயில் பாதைகளும் பாகிஸ்தானிடம் உள்ளன.

***யாரிடம் எவ்வளவு அணு ஆயுதங்கள் உள்ளன?***

சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு சிந்தனைக் குழுவான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) 2024ஆம் ஆண்டுக்கான அறிக்கைப்படி, இந்தியாவில் 172 அணு ஆயுதங்களும் பாகிஸ்தானிடம் 70 அணு ஆயுதங்களும் இருக்கின்றன.

இருப்பினும், இரு நாடுகளும் எத்தனை அணு ஆயுதங்களை நிலை நிறுத்தியுள்ளன என்பது தெளிவாக இல்லை.

"இந்தியாவை எதிர்கொள்ள பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உருவாக்கி வருகிறது. அதே நேரத்தில், இந்தியா நீண்ட தூர ஆயுதங்களை நிலை நிறுத்துவதில் கவனஞ்செலுத்துகிறது. அதாவது, அந்த ஆயுதங்களால் சீனாவையும் தாக்க முடியும்" - என்று அந்த சிந்தனைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானின் அண்டை நாடாகவும் உலகின் மூன்றாவது பெரிய அணுசக்தி நாடாகவும் இருக்கும் சீனா, அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை 410 போர்முனைகளில் இருந்து 500 ஆக 22 சதவீதம் அதிகரித்துள்ளது.

***ட்ரோன்களின் எண்ணிக்கை***

கடந்த ஆண்டு நவம்பரில் பி.பி.சி. உருது சேவை செய்தியாளர் ஷகீல் அக்தர் எழுதிய கட்டுரையின்படி, இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் ட்ரோன்களின் எண்ணிக்கையை வேகமாக அதிகரித்து வருகின்றன.

அடுத்த இரண்டு முதல் நான்கு ஆண்டுகளில் இந்தியாவிடம் சுமார் 5,000 ட்ரோன்கள் இருக்குமென்று பாதுகாப்பு ஆய்வாளர் ராகுல் பேடி கூறுகிறார்.

"பாகிஸ்தானிடம் இந்தியாவைவிட குறைவான ட்ரோன்கள் இருந்தாலும் அந்நாடு வைத்திருக்கும் ட்ரோன்கள் வெவ்வேறு திறன்களைக் கொண்டவை. மேலும் அவை 10 முதல் 11 விதமான தயாரிப்புகளைச் சேர்ந்தவை" - என்றும் அவர் தெரிவித்தார்,




கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில், 3.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள 31 பிரிடேட்டர் ட்ரோன்களை வாங்க அமெரிக்காவுடன் இந்தியா ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. உலகின் மிக வெற்றிகரமான மற்றும் ஆபத்தான ட்ரோன்களாக பிரிடேட்டர் ட்ரோன்கள் கருதப்படுகின்றன.

மேலும், இலக்குகளை அழிக்கக்கூடிய 500 மில்லியன் டொலர் மதிப்புள்ள ட்ரோன்களும் லேசர் மூலம் கட்டுப்படுத்தப்படும் ஏவுகணைகளும் வாங்கப்பட்டன.

"துருக்கி மற்றும் சீனாவிலிருந்து, பாகிஸ்தான் ட்ரோன்களை இறக்குமதி செய்கிறது. அதோடு, அந்நாடு ஜெர்மனி மற்றும் இத்தாலியில் இருந்தும் ட்ரோன்களை வாங்கியுள்ளது" - என்று ராகுல் பேடி கூறுகிறார்.

இவற்றோடு, பாகிஸ்தான் பராக் மற்றும் ஷாபர் என்ற ட்ரோன்களையும் உருவாக்கியுள்ளது. பாகிஸ்தானிடம் துருக்கியின் நவீன பைராக்டர் TB2 மற்றும் அகின்ஜி ட்ரோன்கள் உள்ளன. மேலும், சீனாவிடமிருந்து விங் லோங் 2, சிஹெச்-4 போன்ற ட்ரோன்களையும் வாங்கியுள்ளது.

***நன்றி - பிபிசி***

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1814 – முதலாவது மெதடிஸ்ட் ஆயர் தோமஸ் கோக் சமயப் பரப்புனராக கப்பலில் இங்கிலாந்திலிருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.
- 1851 – கொழும்பு நகரைச் சுற்றிய பகுதிகளில் பலத்த காற்று வீசியதில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1946 – கேகாலையில் நேவ்சுமயர் தோட்டத்தில் இந்தியத் தமிழர் குடியிருந்த 400 ஏக்கர் காணிகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன.
- 1952 – உலகின் முதலாவது ஜெட் விமானமான டி ஹாவிலண்ட் கொமெட்-1, தனது முதல் பறப்பை லண்டனிலிருந்து ஜொகான்னஸ்போர்க் நகருக்கு மேற்கொண்டது.

# கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் வீதிப் பாதுகாப்பை உறுதிசெய்ய தேசியத் திட்டம்




கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையில் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசிய வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (30) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நாட்டில் வீதி விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயமடைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

விபத்து தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் வீதிப் பயன்பாட்டில் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதும் காலத்தின் தேவை என்பதை இனங்கண்டு, கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் இந்த தேசியத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

நாட்டில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலம் சமூகத்தை மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கத்துடன், கிளீன் ஸ்ரீ லங்கா திட்டம் செயற்படுத்தப்படுவதுடன், அங்கு, ஒழுக்கமான சமூகத்தையும் பிரஜைகளையும் கட்டியெழுப்புவதில் முதன்மை கவனம் செலுத்தப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சமூக மற்றும் நெறிமுறைகள் பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் (அவசர சேவைகள்) வைத்தியர் இந்திக ஜாகொட, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சிவகுமார் ,பேராசிரியர் எச்.ஆர். பசிந்து, பிரதிப் பொலிஸ் மா அதிபர் (மோட்டார் வாகனங்கள்) மற்றும் குறித்த அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் ஊடாக சஜித்தின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும்

## திகாம்பரம் எம்.பி. வலியுறுத்து





“ சஜித் பிரேமதாச ஜனாதிபதியாகி இருந்தால் மலையக மக்களின் வாழ்வு மேம்பட்டிருக்கும். எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக அவரின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும்” - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று (01) ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன இணைந்து நடத்திய மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது உண்மையை சொல்லியே சஜித் வாக்குக் கேட்டார். பொய்களை கூறியே அநுர வாக்குக் கேட்டார். இறுதியில் பொய்தான் வென்றது. எனினும், இன்னும் ஒரு வருடத்தில் இந்த அரசாங்கம் ஆட்டம் காணும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இன்னும் நான்கு நாட்களே உள்ளன. அத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றிபெற வைக்கவும். 06ஆம் திகதி காலைவேளையிலேயே சென்று தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிக்கவும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித் ஜனாதிபதியாகி இருந்தால் மலையக மக்கள் வாழ்வில் மாற்றம் வந்திருக்கும். எதிர்க்கட்சியில் இருந்தபோது மலையக மக்கள் தொடர்பில் அநுர கூறிய விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை” - என்றார்.

# பஸ் கட்டணத்தில் எவ்வித மாற்றமுமில்லை

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், பஸ் கட்டணத்தில் எவ்வித மாற்றங் களும் இருக்காது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர், “இந்த நேரத்தில் பஸ் கட்டணங்களைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. விலைச் சூத்திரம் 20 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு மாறாக நாங்கள் செயற்படவில்லை.

எனவே, இந்த நேரத்தில் நாங்கள் கட்டணங்களைக் குறைப்போம் என்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது. அப்படிக் குறைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

எரிபொருள் விலை மட்டும் பஸ் கட்டணங்களைப் பாதிக்கும் ஒரே காரணியல்ல என்றும், மற்ற அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளது. பஸ் கட்டணங்களை மாற்றியமைக்க, டீசல் விலையை ரூ. 25-30 ஆல் குறைக்க வேண்டும் என்றார்.

# தமிழர்கள் தம்மை அங்கீகரித்ததாக காட்டவே உள்ளூராட்சித் தேர்தலில் என்.பி.பி. மும்முரம்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு





தேர்தல் விஞ்ஞாபன வெளியீடும் தேர்தல் பிரசாரக் கூட்டமும் நேற்று முன்தினம் (30) முழங்காவில் - நாச்சிக்குடா சந்தியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு முதன்மை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுவதன் ஊடாக, தமிழ் மக்கள் தங்களை அங்கீகரித்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை அல்ல என்றும் மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றங்களில் இலங்கையின் அரச, இராணுவ நிர்வாகம் ஈடுபடவில்லை என்றும் நிரூபிப்பதற்கான ஜனநாயகத் தீர்ப்பாக உள்ளூராட்சி தேர்தலைப் பயன்படுத்த எல்லாவகை பிரயத்தனங்களையும் மோசடிகளையும் இந்த அரசு மேற்கொண்டுவருகிறது'' என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் பூநகரி பிரதேச சபைக்கான

பூநகரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் வேட்பாளருமான சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் தனபாலன் குபேந்திரன் ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், பூநகரி பிரதேச சபைக்கான வேட்பாளர்கள், கட்சியின் பிரதேச செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மே தினத்தை கொண்டாடிய வங்காலை மக்கள்



(ஜோசப் நயன்)

மன்னார், வங்காலை கிராம மக்கள் இம்முறை மே தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடி யுள்ளனர்.

குறித்த கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பொருளா தார பின்னடைவு மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்பட்ட பாதிப்புகள் உள்ளடங் கலாக பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட் டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த கிராம மக்கள் நேற்று (01) மே தினத்தை ஒன்று திரண்டு மிகவும் ஒற்றுமையாக கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

வங்காலை மீனவ சங்கம், மீனவ கூட்டுறவு சங்கம் மற்றும் வங்காலை விளையாட்டு கழகம் கூட்டாக இணைந்து மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

வங்காலை கிராமத்தில் மீன்பிடி துறையில் அமைந்துள்ள சொரூபத்தடியில் நேற்று(01)காலை மே தினக் கொண்டாட்ட நிகழ்வுடன் திருப்பலியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த கிராம மக்கள் யாவரும் ஒன்று திரண்டு மீன்பிடித் துறைமுகத்தில் போட்டி நிகழ்வுகளில் ஈடுபட்டனர். நீச்சல் போட்டி, பெரிய மற்றும் சிறிய படகுகளின் போட்டி, பெண்களுக்கான கயிறு இழுத்தல், சங்கீத கதிரை, சருக்கு மரம் ஏறல் உட்பட பல போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வங்காலை கிராமத்தின் கடற்படையினர் மற்றும் பொலிஸ் தரப்பினர் உள்ளிட்ட பல்வேறு பிரதிநிதிகளும் குறித்த நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தனர்.

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

(அநுராதபுரம் நிருபர்)

வெலிகந்த பொலிஸ் பிரிவின் மைத்திரிகம பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய வெலிகந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெலிகந்த, மைத்திரிகம பகுதியில் நேற்று முன்தினம் (30) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

காலிங்கவில பகுதியை வசிப்பிடமாக கொண்ட 30 வயதுடைய நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

வெலிகந்த வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கொள்ளை

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்த கொள்ளைச் சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த கொள்ளைச் சம்பவத்தில் தங்க நகைகள், வைரம் பதித்த மோதிரம் மற்றும் சுமார் ரூ. 4.5 மில்லியன் மதிப்புள்ள உயர் ரக கைக் கடிகாரங்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து நேற்று முன்தினம் சுவிஸ் தூதுவரால் முறைப்பாடு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

தூதுவர் ஏப்ரல் 12ஆம் திகதி சுவிட்ஸர் லாந்துக்குச் சென்று ஏப்ரல் 27ஆம் திகதி நாடு திரும்பியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தூதுவர் நாட்டைவிட்டு புறப்பட்டபோது வீடு பாதுகாப்பாக பூட்டப்படவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து தூதுவரின் வீட்டு ஊழியர் களிடமிருந்து ஏற்கனவே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## தண்ணீருக்கு ஒப்பானது உலக வாழ்வு!

அல்குர்ஆன் அது வலியுறுத்த வரும் உண்மைகளை பல பாணிகளில் முன்வைக்கும். உதாரணங்கள், உவமைகள் மூலம் விஷயங்களை விளக்குவது அது கையாளுகின்ற ஒரு முக்கியமான பாணியாகும்.

ஒரு கருத்துப் பொருளை காட்சிப் பொருளுடன் ஒப்பிட்டு குறிப்பிடுவதன் மூலம் அது பற்றிய மிகச் சரியான பார்வையை முன்வைக்க முடியும். இந்த வகையில் அல்குர்ஆன் பல கருத்துப் பொருட்களை காட்சிப் பொருட்களுடன் ஒப்பிட்டு விளக்குவதைக் காணலாம்.

உதாரணமாக அல்குர்ஆன் சில இடங்களில் உலக வாழ்க்கையை தண்ணீருக்கு ஒப்பிடுகின்றது. உதாரணமாக பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்:

“இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம் நாம் வானத்திலிருந்து இறக்கிவைக்கும் மழை நீரைப் போன்றது...”(10:24)

“மேலும் இவ்வுலக வாழ்க்கைக்கு ஓர் உதாரணம் அவர்களுக்கு (நபியே!) நீர் கூறுவீராக! “அது நாம் வானத்திலிருந்து இறக்கி வைத்த நீரைப் போலிருக்கிறது...”(18:45)

உலக வாழ்க்கையை தண்ணீருக்கு ஒப்பிடுவதன் மூலம் அல்-குர்ஆன் அதன் இயல்பை, உண்மை நிலையை மனிதர்களுக்கு புரியவைக்க முனைகின்றது.

ஏன் அல்குர்ஆன் உலக வாழ்வை தண்ணீருக்கு ஒப்பிடுகின்றது என்பதை இங்கு சற்று விரிவாகக் கலந்துரையாடுவோம். இது தொடர்பில் அல்-குர்ஆன் விரிவுரையாளர்கள் அற்புதமாக விளக்கியுள்ளார்கள். அத்தகைய விளக்கங்களை இமாம் அல்-குர்துபி தனது தப்ஸீரான அல்-ஜாமிஃ லி அஹ்காமில் குர்ஆனில் தொகுத்துத் தந்துள்ளார். அவை பின்வருமாறு:

தண்ணீரானது ஓர் இடத்தில் தொடர்ந்து நிற்காது; ஓடிக்கொண்டே இருக்கும்; அவ்வாறே உலக வாழ்வும் ஒரே நிலையில் ஒரே இடத்தில் இருக்காது; நிலை மாறிக்கொண்டே இருக்கும்.

தண்ணீர் தொடர்ந்து இருக்காது; போய்விடும். உலக வாழ்வும் அப்படித்தான்; நிலைக்காது; அழிந்துவிடும்.

தண்ணீரில் இறங்கியவன் நனையாமல் இருக்கமாட்டான். அது போல உலக வாழ்வில் ஈடுபாடு காட்டுபவன் அதன் பாதிப்பிலிருந்தும் மயக்கத்திலிருந்தும் தப்பிக் கொள்ள மாட்டான்.

தண்ணீர் அளவோடு இருந்தால் நன்மை பயக்கும்; பயனளிக்கும். அது அளவு கடந்தால் அழிவும் நாசமும் விளையும். அவ்வாறுதான் உலகமும் அதன் சம்பத்துகளும். அவை அளவோடு இருந்தால் நன்மையாக அமையும். மிதமிஞ்சிவிட்டாலோ ஆபத்தாக மாறிவிடும். அல்குர்ஆன் உலக வாழ்க்கையை தண்ணீருக்கு ஒப்பிடுவது தொடர்பில் மற்றும் சில அறிஞர்கள் வேறு சில விளக்கங்களையும் தந்துள்ளார்கள். அவற்றில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு:

தண்ணீரை நீங்கள் தொட்டால் அதன் நிலை மாறும்; பழுதடைந்து விடும். அது போலவே உலகமும். அதனை யார் கையாள்கின்றாரோ அது அவருக்கு சோதனையாக அமைந்துவிடும்; அவரை ஏதோ ஒரு வகையில் பாதிக்கும்.

தண்ணீர் வரும்போது சொட்டுச் சொட்டாக வரும்; போகும் போது ஒரேயடியாக மொத்தமாகப் போய்விடும். உலகமும் அதன் சம்பத்துகளும் அப்படித்தான். கொஞ்சம் கொஞ்சமாக வரும்; போகும்போது மொத்தமாகப் போய்விடும்.

தண்ணீரின் தன்மை குறைவது; உலக வாழ்வின் தன்மையும் அப்படித்தான்; குறைந்து கொண்டே செல்லும்.

தண்ணீரானது ஓர் இடத்தில் குறைவாகவும் மற்றோர் இடத்தில் அதிகமாகவும் இருக்கும்; உலகின் சுகபோகங்களும் அப்படியே.

மிதமிஞ்சிய நீர் பயிரைக் கெடுக்கும்; மிதமிஞ்சிய உலகத்தின் பொருட்செல்வம் ஆன்மாவைக் கெடுக்கும்.

எல்லா நீரும் சுத்தமாக இருக்காது. அவ்வாறே எல்லா (உலக) செல்வங்களும் சுத்தமாக இருக்காது. அவற்றில் ஹலாலானதும் இருக்கும்; ஹராமானதும் இருக்கும்.

தண்ணீர் அழுக்குகளைப் போக்கி சுத்தம் செய்யும். அதுபோன்று ஹலாலான செல்வம் ஒருவரின் பாவக் கறைகளை நீக்கி அவரைச் சுத்தம் செய்யும்.

உலக வாழ்க்கையை தண்ணீருக்கு ஒப்பிட்டு அதன் யதார்த்தத்தையும் உண்மை நிலையையும் எவ்வளவு அற்புதமாக அல்குர்ஆன் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

# போலி விசாவில் போலந்து செல்ல முயன்ற இருவர் கைது

போலி விசாக்களைப் பயன்படுத்தி போலந் துக்குச் செல்ல முயன்ற இரண்டு சந்தேக நபர் களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கட்டார் வழியாக போலந்துக்குச் செல்ல முயன்ற இருவர் மீது நடத்தப்பட்ட விசாரணை களைத் தொடர்ந்து, இந்தக் கைதுகள் மேற்கொள் ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம்(30) கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 31 மற்றும் 38 வயதுகளையுடையவர்கள் என்பதுடன், அவர்கள் தெமடோகர மற்றும் பெலிகல பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.இருவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சித் தேர்தல் விதிமீறல்கள் அதிகரிப்பு

## இதுவரை 3,828 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப் பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், இதுவரை 3,828 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 24 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 182 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறை சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப் பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 3,563ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், இதுவரையான முறைப்பாடுகளில் 3,206 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 622 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



# நாடளாவிய ரீதியில் அரசியல் கட்சிகளின் மே தின நிகழ்வுகள்




தேசிய மக்கள் சக்தி காலிமுகத்திடலில்...




ஐக்கிய மக்கள் சக்தி தலவாக்கலையில்...





சர்வஜன அதிகாரம் வரக்காப்பொலயில்...





ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனநுகேகொடையில்...

## ஐரோப்பிய ஒன்றிய (EU) பிரதிநிதிகளுடன் மு.கா. செயலாளர் நிசாம் காரியப்பர் சந்திப்பு



ஐரோப்பிய ஒன்றியப் (EU) பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரை நேற்று (01) சந்தித்தார்கள்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் கீழ்க்காணும் விடயங்களை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் கட்டத்தில் குறிப்பாக, அமெரிக்காவின் எதிர்பாராத உயர்வு வரி விதிப்புகளின் மத்தியில் GSP+ சலுகை இலங்கைக்கு வழங்கப்படுவது மிக முக்கியமானது என்பதை எமது கட்சி முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.

இருப்பினும், ஸ்ரீலங்கா அரசாங்கம் கீழ்க்காணும் விடயங்களில் நடந்துகொள்ளும் விதி கவலைக்குரியதாக உள்ளதாகவும் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

**1. பயங்கரவாதத் தடைச் சட்டம்**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) இரத்துச்செய்யப்பட்டு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைத் தர நிலைகளுடன் முழுமையாக ஒத்துச்செல்லும் சட்டம் கொண்டுவரப்படவேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

**2. PTA பயன்படுத்துவதில் இடைநிறுத்தம்**

புதிய சட்டம் அமுலுக்கு வரும்வரை PTA பயன்படுத்தப்படக் கூடாது., ஈஸ்ரர் ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாகத் தொடர்ந்துவரும் விசாரணைகளுக்கு மாத்திரம் ஒரு விதிவிலக்கு இருக்கலாம்.

**3. கருத்துச் சுதந்திரத்தின் பாதுகாப்பு**

கருத்துச் சுதந்திரத்தை அடக்குவதற்காக PTA சட்டத்தைப் பயன்படுத்துவதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். உதாரணமாக, பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்த்து ஸ்டிக்கர் ஒட்டியதற்காக PTA ஐ பயன்படுத்தி முஸ்லிம் இளைஞனைத் தடுத்துவைத்தமை ஏற்க முடியாதது. அதை நாங்கள் கண்டிக்கின்றோம். இதற்காக உரிய இளைஞனிடம் அரசாங்கம் மன்னிப்புக் கோர வேண்டும்.

**4. மாகாண சபைத் தேர்தல்கள்**

மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும். அவற்றை முன்னெடுக்கத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**5. பாராளுமன்ற ஜனநாயகமும் கட்சித் தலைமை அங்கீகாரமும்**

சிறந்த ஜனநாயக நடைமுறைகளுக்கேற்ப உறுப்பினர்கள் எந்தக் கட்சியின் கீழ் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் உண்மையாகவே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற விடயத்தை அறிந்து அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். முக்கியமாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரஊப் ஹக்கீமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றக் குழுத் தலைவராக சபாநாயகர் ஏற்க மறுப்பதை ஐரோப்பிய ஒன்றியம் கண்டிக்க வேண்டும்.

## கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் மே தின நிகழ்வு




கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் மேதின நிகழ்வானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் நாகலிங்கம் திரவியம் தலைமையில் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு கலைவாணி கலையரங்கில் உணர்ச்சிபூர்வமான முறையில் நேற்று (01) இடம்பெற்றது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தடுத்துவைக்கப்பட்டுள்ள போதும் பெருமளமான மக்கள் உணர்வெளிச்சியுடன் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன், கட்சியின் தேசிய அமைப்பாளர் தம்பிராஜா தஜிவரன், கட்சியின் கல்வி, கலை, கலாசார செயலாளர் மணிசேகரம் முற்போக்கு தமிழர் கழக இணைப்பாளர் நிர்மலன் உட்பட கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் குளத்தின் நீர்மட்ட அதிகரிப்பால் நான்கு வான் கதவுகள் திறப்பு

(கந்தளாய் செய்தியாளர்)

கடந்த இரு தினங்களாகப் பெய்துவரும் கனத்த மழையால் கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் நான்கு வான்கதவுகள் திங்கட்கிழமை (28) இரவு அவசரமாகத் திறக்கப்பட்டுள்ளன.

கந்தளாய் குளத்தின் மொத்த நீரின் கொள்ளளவு 113,000 கன அடியாகும். கன மழை காரணமாக தற்போது நீரின் அளவு 114,000 கன அடியாக உயர்ந்துள்ளது.

இதனால் மேலதிக நீரை வெளியேற்ற வேண்டியிருப்பதால் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் இதனூடாக ஒரு கன அடி நீர் வெளியேறுவதாகவும் கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவித்தார்.

தற்போது, இந்தப் பிரதேசத்தில் சிறுபோக வேளாண்மைச் செய்கைக்காக விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதால், பல நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி, பாதிக்கப்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# உள்ளூராட்சி தேர்தல்களுக்கான அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கு செயலமர்வு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (30) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் ஒழுங்குபடுத்தலின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கான தெளிவூட்டும் கலந்துரையாடல் நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களுக்கான நியமனம் மற்றும் இவர்களுக்கான சட்ட ஏற்பாடுகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் உதவித் தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்பட்டது.

ஒரு வாக்கெடுப்பு நிலையத்துக்கு முகவர்கள் இருவரை நியமிக்க முடிவதுடன் ஒரு வாக்கெண்ணல் நிலையத்துக்கு போட்டியிடும் கட்சி அல்லது குழு சார்பாக இரண்டு முகவர்கள் வீதம் நியமனம் செய்ய முடியும் என்பதுடன் தபால் வாக்கெண்ணும் நிலையமொன்றுக்கு இரண்டு முகவர்கள் நியமனம் வழங்க முடியும். மேலும் முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய விடயதானங்கள் தொடர்பாக இதன்போது தெளிவூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதன்போது அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களினால் முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கான விளக்கங்கள் அதிகாரிகளினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.





கனமழையுடன் கூடிய பலத்த காற்றால் நேற்றுமுன்தினம் (30) தம்பலகாமம் பகுதியில் வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியின் தம்பலகாமம் கிராம சேவகர் பிரிவே இவ்வாறு அனர்த்தத்துக்கு இலக்காகியுள்ளது. இதன் காரணமாக தென்னை மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் வீட்டுக் கூரை உள்ளிட்ட வீட்டு உபகரணங்களும் சேதமடைந்துள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். மற்றும் கனமழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (கிண்ணியா செய்தியாளர்)

# உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து வெற்றிபெறும்

## முன்னாள் எம்.பி. தௌபீக்



(தம்பலகாமம் செய்தியாளர்)

"கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிட்டு வெற்றி பெற்றதைப்போன்று இத்தேர்தலிலும் வெற்றிபெறும்" - என இக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

கிண்ணியாவில் செவ்வாய்க்கிழமை(29) இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிண்ணியா நகர சபைத் தேர்தலில் நான்கு வட்டாரங்களையும் கிண்ணியா பிரதேச சபைத் தேர்தலில் ஏழு வட்டாரங்களையும் எமது கட்சியால் வெற்றி பெற்றிருந்தோம். 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிண்ணியாவுக்கு மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் வருகை தந்தபோது ஒரு சில மக்களால் அவர் அவமானப்படுத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார்.

மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் உருவாக்கியதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாகும். முஸ்லிம் சமூகத்துக்காக இலங்கையில் குரல் கொடுக்கின்ற ஒரேயொரு கட்சியாக இது விளங்குகின்றது. 2000ஆம் ஆண்டு எம்.எஸ்.வைத்துல்லாவின் மறைவையடுத்து திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவு செய்தார்கள். நான் இம்மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக உள்ளேன். அதன் பின் பல வேலைத்திட்டங்களை திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுத்துள்ளேன்.

கிண்ணியாவுக்கான பாலம் இல்லாததால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள். அதனைக் கருத்திற்கொண்டு சவூதி அரசாங்கத்தில் பேசி நிதியைப் பெற்று எனது முயற்சியால் கிண்ணியாவுக்கான பாலம் அமைக்கப்பட்டது. இம்மாவட்டத்தில் பல்கலைக்கழக கல்லூரி மற்றும் மகாவலி கங்கை நீரை விவசாயிகளுக்கு திசை திருப்பும் திட்டங்கள் என்னால் முன்னெடுக்கப் பட்டும் அதனை அரசியல்வாதிகள் தடுத்து நிறுத்தினார்கள். அது நிறைவுபெறவில்லை.

2000ஆம் ஆண்டுக்குப் பின் வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்பட்டன. அவ்வீதிகள் செப்பனிடப்பட்டு திருகோணமலை மாவட்டம் முழுவதும் கார்ப்பட் வீதிகளாகக் காட்சியளிக்கின்றன. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகம், அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பில் கிழக்கு பல்கலைக்கழகம், தாழங்குடா தேசிய கல்விக் கல்லூரி ஆகியன அமையப் பெற்றுள்ளன. ஆனால், எமது மாவட்டத்தில் பல அரசியல்வாதிகள் இருந்தும் பல்கலைக்கழகம், தேசிய கல்விக் கல்லூரி இல்லாதது பெரும் குறைபாடாக இருந்து வருகின்றது" - என்றார்.



தேர்தல் திணைக்களத்தின் அனுமதியுடன் மட்டக்களப்பு மாநகர சபையின் பணிகளை விரைவாகவும் வினைத்திறனுடனும் முன்னெடுப்பதற்காக உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சால் மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு புதன்கிழமை(30) மாநகர ஆணையாளர் என்.தனஞ்ஜெயன் தலைமையில் சபை வளாகத்தில் இடம்பெற்றது. சமய வழிபாடுகளின் பின் அதிதிகளால் புதிய கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாநகர முன்னாள் ஆணையாளர்கள், பிரதேச செயலாளர், அரச உயரதிகாரிகள், சபை உயரதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (மட்டக்களப்பு செய்தியாளர்)

# தேர்தல் சட்டவிதி மீறல்கள்: 210 முறைப்பாடுகள் பதிவு

(மட்டக்களப்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2025 க்கான திகதி, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஏப்ரல் 29ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்டமை தொடர்பாக இதுவரை 210 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் அமையப்பெற்றுள்ள தேர்தல் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ள இம்முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிமீறல் அடிப்படையில் சாதாரணதரமுடையவை எனவும் அநேகமான முறைப்பாடுகள் இதுவரை முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# கல்லடி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பங்கேற்பு

(கல்லடி செய்தியாளர்)

'வெற்றி நமதே ஊர் நமதே' எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாநகரசபையின் கல்லடி - 14 ஆம் வட்டாரத்துக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் வியாழக்கிழமை (30) கல்லடி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நடைபெற்ற இப்பிரசாரக் கூட்டத்தில், மட்டக்களப்பு மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மகளிர் அணித் தலைவி திருமதி வனிதா தேவப்பெருமாள், வங்கி மற்றும் நீதிமன்றத்தின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினரான திலிப்குமார் ஆகியோர்



அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபைக் கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



தொழிலாளர் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி Blitz சமூக இளைஞர் அமைப்பு மற்றும் முச்சக்கரவண்டிச் சாரதிகள் நலன்புரிச் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த குளிர்பானம் வழங்கும் நிகழ்வு நேற்று(01) காத்தான்குடி குட்வின் சந்தியில் இடம்பெற்றது. தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலையில் வீதிகளில் பயணிக்கும் பயணிகளுக்கு தாகம் தீர்க்கும் நோக்கிலும் தொழிலாளர் தினத்தை அனுஷ்டிக்கும் வகையிலும் குளிர்பானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. (காத்தான்குடி செய்தியாளர்)





வாகரை மகுடம் சிறுவர் அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களின் விளையாட்டுத் திறனை விருத்தி செய்யும் முகமாக பல்வேறு பாரம்பரிய கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன்போது போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக போதகர் இலக்ஷ்மணன் ,வாகரை பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

# வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு



(கிண்ணியா செய்தியாளர்)

எதிர்வரும் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பாக வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு புதன்கிழமை(30) திருகோணமலை அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம்.ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக வட்டாரத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.கே.டி.நிரஞ்சனால் தெளிவூட்டப்பட்டன.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறும். 129 நிலையங்களில் வாக்கெண்ணல் பணி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்செயலமர்வில் வட்டாரத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் நேற்று (01) கல்முனை தமிழர் கலாசாரப் பேரவை மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் இடம்பெற்றது. (எருவில் செய்தியாளர்)




உலக தொழிலாளர் தினம் மூதூர் - மல்லிகைத்தீவு கிராமத்தில் நேற்று(01) காலை கொண்டாடப்பட்டது. இதன்போது தொழிலாளர்களைக் கௌரவிக்கும் வகையில் மல்லிகைத்தீவில் உள்ள உழவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வை கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது பிரதேச தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (மூதூர் செய்தியாளர்)

# நாகையிலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு இயக்கப்படும் பயணிகள் படகுக் கட்டணம் குறைப்பு

## 22 கிலோ பொருட்களை கட்டணமில்லாமல் எடுத்துச்செல்லலாம்






(ஜோசப் நயன்)

நாகப்பட்டினத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு சுபம் நிறுவனத்தின் சார்பில் சிவகங்கை பயணிகள் கப்பல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை தவிர்த்து ஆறு நாட்கள் இயக்கப்பட்டு வரும் கப்பல் சேவையில் இருநாட்டுப் பயணிகளும் பயன் பெற்று வருகின்றனர்.

இந்தநிலையில், சிவகங்கை கப்பல் நிறுவனத்தில் அதன் தலைவர் சுந்தர்ராஜன் நேற்று(01) நாகப்பட்டினம் பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது நாகப்பட்டினத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் சிவகங்கை கப்பல் சேவை இயக்கப்பட்டு வருவதாகவும் அதில் கோடை விடுமுறையை முன்னிட்டு பயணிகளைக் கவரும் விதமாக தற்போது 8,500 ரூபாவாக உள்ள இருவழிப் பயணக் கட்டணம் 8,000 ரூபாவாகக் குறைக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

மேலும் தற்பொழுது 10 கிலோ வரை அனுமதிக்கப்படும் இலவச லக்கேஜ் இனி 22 கிலோ வரை அனுமதிக்கப்படுமென்றும் அதில் 7 கிலோ கைப்பை 15 ஒரு கிலோ லக்கேஜ் இலவசமாக அனுமதிக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

மேலும் ஜூன் முதல் வாரத்தில் 250 பேர் பயணிக்கக்கூடிய கப்பல் இயக்கப்பட வுள்ளதாகவும் கார்கோ கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாகவும் கப்பல் நிறுவனத் தலைவர் சுந்தர்ராஜன் மேலும் தெரிவித்தார்.

# இரத்தினபுரி மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம்!

## 28 பேருக்கு எதிராக வழக்கு - 135 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை





(இரத்தினபுரி நிருபர்)

இரத்தினபுரி மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு நுளம்புகள் காணப்பட்ட 28 இடங்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு தொற்று ஒழிப்பு குறித்து நேற்று (01) இடம்பெற்ற ஊடக கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த வைத்தியர் கபில கன்னங்கர,

இரத்தினபுரி மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள மேலும் 135 டெங்கு தொற்று பரவும் இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2025 ஜனவரி மாதம் முதல் இன்று வரை இரத்தினபுரி மாவட்டம் முழுவதும் சுமார் 1,700 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.அதில் இரத்தினபுரி மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மட்டும் சுமார் 515 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இரத்தினபுரி போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் 199 பணியாளர்கள் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாநகர சபைப் பகுதியில் உள்ள பாடசாலைகள், மத ஸ்தலங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வீடுகள், வீதிகள் என்பன சுகாதாரத் துறையினர்களால் தற்போது சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு தொற்றைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன இராணுவத்தினரை நியமித்துள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை – விற்பனை நிலையங்களுக்கு பழுதடைந்த முட்டைகள் விற்பனை

## வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை




வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியிலுள்ள முட்டை விற்பனை நிலையத்தில் பாடசாலை உட்பட பலருக்கு பழுதடைந்த முட்டை விற்பனை செய்ததாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையை நேற்று முன்தினம் (30) மாலை மேற்கொண்டனர்.

இதன்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட முட்டைகளும் மீட்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டன.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் இயங்கி வரும் முட்டை விற்பனை நிலையத்திலிருந்து பாடசாலை மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட முட்டைகள் பழுதடைந்த நிலையில், காணப்பட்டதாக வவுனியா பொதுச் சுகாதர பரிசோதகர்களுக்கு கிடைத்த 3 முறைப்பாடுகளையடுத்து குறித்த வர்த்தக நிலையம் மீது சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது பாவனைக்குதவாத முறையில் முட்டை விற்பனை செய்ததாக குறித்த வர்த்தக நிலையத்துக்கெதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டதுடன், அதிகளவிலான முட்டைகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன.

# வத்தளை ஸ்ரீ முத்துக்குமரன் ஆலய 23ஆவது வருடாபிஷேகம்

வத்தளை, ஹுணுப்பிட்டிய ஸ்ரீ முத்துக்குமரன் ஆலய 23ஆவது வருடாபிஷேக அலங்கார உற்சவ விழா வரும் ஞாயிற்றுக்கிழமை (04) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இதனையடுத்து 19ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு இரதோற்சவ திருவிழா இடம்பெறும்.

விழாக் காலங்களில் 20ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பால்குட பவனி, தீர்த்த அபிஷேகமும் 21ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு பட்டாபிஷேகமும் திருக்கல்யாணம், திருவூஞ்சல், மாவிளக்குப் பூஜையும் 22ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு வைரவர் பூஜையும் இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுறும்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக் களம்

மருத்துவர் விக்னவேணி செல்வநாதன் தலைமையில் இன்று 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்கள நிகழ்ச்சியில் முனைவர் பால.சிவகடாட்சம் எழுதிய 'யாழ்ப்பான மன்னன் செகராஜசேகரம் ஆக்குவித்த இரசவர்க்கம்' எனும் நூலை முன்வைத்து சமூக ஆய்வாளர் கந்தையா சண்முகலிங்கம் உரையாற்றவுள்ளார்.

# தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை அரசாங்கம் நிச்சயம் வழங்கும்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்



தொழிலாளர் தோழர்களுக்கு கிடைக்க வேண்டிய அத்தனை உரிமைகளையும் அங்கீகாரத் தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிச்சயம் வழங்குமென்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த உலகை இயக்கிக்கொண்டிருக்கும் - உலக மக்களை வாழவைத்துக்கொண்டிருக்கும் அத்தனை தொழிலாளர் தோழர்களுக்கும் இந்நாளில் எனது புரட்சிகரமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


அன்று முதல் இன்று வரை எமது நாட்டில் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தொழிலாளர்கள் வழங்கிவரும் பங்களிப்பு அளப்பரியவை. எனவே, உடலாலும் அறிவாலும் உழைக்கிற எவருக்கும் எந்த இடத்திலும் அநீதி இழைக்க இடமளியோம். உழைப்புச் சுரண்டலுக்கெதிராக கடும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.

எமது நாட்டில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது உழைப்பை மட்டுமல்ல உயிரைக்கூட இந்நாட்டு மண்ணுக்காக உரமாக்கியுள்ளனர். எனவே, அம்மக்கள் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழலை நிச்சயம் நாம் உருவாக்குவோம். தோட்டக் காணிகளை தொழிலாளர் தோழர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

அதேபோல, எமது கடற்றொழில் தொழிலாளர் தோழர்களுக்கும் பல்வேறு விடயங்களை நாம் செய்து வருகின்றோம். அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எமது ஆட்சியின் கீழ் உழைப்பாளர்களுக்கு எவ்விதத்திலும் அநீதி நடக்காது - என்றுள்ளது.

# பூஜை வழிபாடுகளுடன் மே தினத்தை நிறைவுசெய்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்





இலங்கையிலுள்ள பிரதான தொழிற்சங்கங்களில் ஒன்றான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இம்முறை பிரதான மேதினக் கூட்டத்தையோ அல்லது பேரணியையோ நடத்தவில்லை.

கொட்டகலையிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் கட்சிக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அத்துடன், கொட்டகலை முத்து விநாயகர் கோயிலில் பூஜை வழிபாடு இடம்பெற்றது. இதில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் பங்கேற்றார்.

அத்துடன், மே தினத்தை முன்னிட்டு தோட்ட மற்றும் நகரவாரியாக சிறு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இ.தொ.கா. பிரமுகர்கள் பங்கேற்கவுள்ளனர்.

மே தினத்துக்காக செலவிடப்படும் பணம், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்காக ஒதுக்கப்படுமென இ.தொ.காவின் பொதுச்செயலாளர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'கிளீன் ஸ்ரீலங்கா' வழிகாட்டலில் ஆயிரம் ஏக்கர் வன வளர்ப்பு



'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம் தனியார் துறையுடன் இணைந்து ஆயிரம் ஏக்கரில் வனவளர்ப்புச் செய்யத் திட்டமிட்டுள்ளது.

கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் அரச - தனியார் - மக்கள் கூட்டிணைவுடன் (Public- Private – People Partnership) 4P எண்ணக்கருவின் அடிப்படையில் செயற்படுத்த முன்மொழியப்பட்ட பாரியளவிலான திட்டமாக இந்த வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கான முதற்கட்டக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (30) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

திட்டம் தொடர்பான குறித்த தொழில் நுட்ப விடயங்களைத் தீர்க்கவும் காணியை விடுவிப்பதற்குத் தேவையான அடிப்படை விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சூழலைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களினதும் அரச மற்றும் தனியார் துறையின் பொறுப்பை நினைவுகூரும் வகையில், நமது நாட்டின் பல்லுயிர் பெருக்கம், வனப்பகுதி, இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்காக பல்வேறு பயன்மிக்க திட்டங்கள் தனியார் துறையினதும் பங்களிப்புடன் அடுத்த வருடம் செயற்படுத்த 'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டம் திட்டமிட் டுள்ளது. ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, 'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டத்தின் மேலதிக செயலாளர் எஸ்.பீ.சீ. சுகீஸ்வர ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, சுற்றாடல் அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# ஐஸுடன் இருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

ஐஸ் போதைப்பொருட்களை கார் ஒன்றில் எடுத்துச்சென்ற சந்தேக நபர்கள் இருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பதவிய பொலிஸ் பிரிவின் தளுகம பகுதியில் நேற்று முன்தினம் (30) நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் இருவரைக் கைதுசெய்ததுடன், 05 கிராம் 700 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருட்களையும் சந்தேகநபர்கள் பயணித்த காரையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புல்மோட்டை முகாம் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 24 மற்றும் 25 வயதுகளையுடைய பதவிய மற்றும் அநுராதபுரம் தலாவ பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சந்தேக நபர்களை பதவிய பொலிஸ் நிலையத்தில் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# ஆறாவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு - 2025

தருமை ஆதீன அகில உலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தும் அகில உலக சைவ சித்தாந்த 6ஆவது மாநாடு சென்னையில் உள்ள எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாடு மே மாதம் 03, 04 மற்றும் 05 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

எமது தருமை ஆதீனம் திருமறையையும் ஒருங்கே போற்றிப் பணிந்து வரும் மிகவும் தொண்மையான ஆதீனமாகும். தமிழுக்கும் சமயத்துக்குமென பல்வேறு வகையான சமூகப்பணி, கல்விப்பணி, சமயப்பணி, மருத்துவப்பணி என இடையறாது செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த மாபெரும் மாநாட்டில் பல்வேறு சைவ ஆதீனங்களின் மடாதிபதிகள், புகழ்பெற்ற சைவ சித்தாந்த அறிஞர்கள், தமிழ் மொழி ஆர்வலர்கள், ஆய்வுக் கட்டுரையாளர்கள் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். மேலும், இந்த மாநாட்டில் 300க்கும் மேற்பட்ட சைவ சித்தாந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படவிருக்கின்றன.

சைவ சித்தாந்தம் தொடர்பான 75புதிய நூல்கள் இந்த மாநாட்டின்போது வெளியிடப்படவுள்ளன. 8 அறிஞர் பெருமக்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இலங்கையிலிருந்து 'சிவாகம கலாநிதி' சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வர குருக்கள், கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் மாநாட்டில் வாழ்த்துரை வழங்குவார்கள்.

அத்துடன், மேலும் பல சைவப் பெருமக்களும் கலந்து கட்டுரை சமர்ப்பணம் செய்கிறார்கள்.

சைவ சமயத்தின் பெருமையை உலகெங்கும் பரப்பும் இந்தப் பிரம்மாண்டமான நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நமது தருமை ஆதீனம் 27 ஆவது நட்சத்திர குருமணிகள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

பெருவிழாவாக நடைபெறும் மாநாடு சிறப்புடன் - உயர்வுடன் - மகிழ்வுடன் கூடியதாக அமையவேண்டுமென இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் இந்துக் குருமார் அமைப்பினர் உறுதியுடன் இணைந்து வாழ்த்தி நிற்கிறார்களென அமைப்பின் தலைவர், சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள் தெரிவித்துள்ளார்.

# ரணசிங்க பிரேமதாசவின் 32ஆவது வருட நினைவு தினம்



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 32ஆவது வருட நினைவு தினம் நேற்றுக் காலை (01) அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பு - 12, வாழைத் தோட்ட உயர் நீதிமன்ற வளாகத்துக்கருகில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக் கருகில் நேற்று பிரேமதாசவின் குடும்ப உறுப்பினர்களால் மலர்க்கொத்து வைத்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருமதி ஹேமா பிரேமதாச, சஜித் பிரேமதாச, திருமதி சஜித் பிரேமதாச உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பௌத்த குருமார்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இம்முறை பிரேமதாசவின் நினைவு தினம் மிகவும் எளிமையாகக் கொண்டாடப்பட்டது. குறிப்பாக, மதத் தலைவர்களின் ஆசிகள், பிரமுகர்களின் பேச்சுகள் எதுவுமின்றி மலரஞ்சலியுடன் குறுகிய நேரத்தில் நிகழ்வு நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பொது மக்களும் இம்முறை கலந்து கொள்ளவில்லை.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## Healthguard புதிய கிளை மாலபேயில் திறப்பு



Sunshine Holdings PLCஇன் சுகாதாரத் துறையின் துணை நிறுவனமாகவும் இலங்கையின் முன்னணி சுகாதார மற்றும் ஆரோக்கிய சேவைகளையும் வழங்கும் வாடிக்கையாளர் விற்பனைச் சங்கிலியான Healthguard தனது 16ஆவது விற்பனை நிலையத்தை பொதுமக்களுக்காக தலாஹேன, மாலபேயில் திறந்துள்ளது. இந்த மைல்கல் 2025 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட முதல் Healthguard மருந்தகத்தைக் குறிக்கிறது மற்றும் கொழும்புக்கு வெளியில் புறநகர் சமூகத்தின் வளர்ந்து வரும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட சங்கிலியின் மூலோபாய விரிவாக்கத்தையும் இது குறிக்கிறது. புதிதாக நிறுவப்பட்ட இந்த மருந்தகம் வாடிக்கையாளர் சங்கிலியின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி ஃபர்மான் நிசார் மற்றும் முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதம செயற்பாட்டு அதிகாரி, இலங்கை முழுவதும் சுகாதார சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதில் Healthguard கொண்டுள்ள உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்.

"எங்கள் நோக்கம், வாடிக்கையாளரை எல்லாவற்றினதும் மையமாக வைத்து முழுமையான வாடிக்கையாளர் சுகாதாரத் தீர்வுகளை வழங்குவதாகும்" - என நிசார் தெரிவித்தார். "மேலும், உச்ச தரமான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பேணுவதில் நாங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொரு வாடிக்கையாளரின் அனுபவமும் நம்பகமானதாகவும் நிம்மதியளிப்பதாகவும் இருக்கும் என்பதை உறுதி செய்கிறோம்" - என அவர் மேலும் தெரிவித்தார்.



பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ள முன்னணி கூட்டாண்மை நிறுவனமான, Baurs என பரவலாக அறியப்படும் A. Baur & Co. (Pvt) Ltd, அண்மையில் தனது 1000 ஆவது பணிப்பாளர் சபைச் சந்திப்பை முன்னெடுத்திருந்தது. கடந்த 128 வருட காலமாக புத்தாக்கத்தை முன்னெடுத்தல், நிலைபேறாண்மையைக் கட்டியெழுப்பல் மற்றும் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தல் போன்றவற்றுக்கான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்புக்கான சிறந்த எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது. கொழும்பு 01, மேல் சத்தாம் வீதியில் அமைந்துள்ள Baur கட்டிடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நிஷாந்த வீரசிங்க, பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர்/பணிப்பாளர் – ஹெல்த்கெயார், அனோஜ பஸ்நாயக்க, பணிப்பாளர் – தகவல் தொழில்நுட்பம், நிற்போர் – ஜனக குணசேகர, பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர்/பணிப்பாளர் – விவசாயம் மற்றும் பவித்ரா சமரசிங்க, பணிப்பாளர் – நிதியியல் மற்றும் செயற்பாடுகள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## கொழும்பில் வெற்றிகரமாக நிறைவுற்ற Global Franchise Forum - 2025



Global Franchise Forum (GFF) இலங்கை அமர்வு, ஏப்ரல் 27 ஆம் திகதி கொழும்பு, Sheraton ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பெருமளவு சர்வதேச வர்த்தக நாமங்கள், முதலீட்டாளர்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபார தலைவர்கள் போன்றவர்கள் பங்கேற்றிருந்தனர். சந்திப்புகள், தகவல் பரிமாற்றங்கள் மற்றும் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்திய முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

எதிர்பார்க்கப்பட்டதை விட உயர்ந்தளவானோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், பரந்தளவு பார்வையாளர்கள் வரவேற்கப்பட்டனர். விருந்தோம்பல், விற்பனை, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் கல்வி போன்ற துறைகளின் அங்கத்தவர்கள் பங்கேற்றதுடன், அவர்களுடன் தொழில்முயற்சியாளர்கள், வளர்ச்சியில் கவனம் செலுத்தும் சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் தீர்மானமெடுப்போரும் பங்கேற்றிருந்தனர்.

இந்த அமர்வு இந்தியா-இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய வர்த்தக தொழிற்றுறை சம்மேளனம் (CNCI), இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICC), கொழும்பு வர்த்தக சம்மேளனம், இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்றுறை சம்மேளனங்களின் ஒன்றியம் (FCCISL) மற்றும் இந்திய சிறிய வியாபார மற்றும் Franchise சம்மேளனம் (ISFA) ஆகியன பங்காளர்களாக நிகழ்வுக்கு ஆதரவளித்திருந்ததுடன், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சர்வதேச franchise விருத்தியின் முக்கியத்துவத்தைப் பற்றியும் விளக்கியிருந்தன.

## 2024ஆம் ஆண்டுக்கான சிறந்த நிதியியல் பெறுபேறுகளை அடைந்துள்ள ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோப்பரேஷன் ஜெனரல் லிமிட்டெட் நிறுவனம்

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோப்பரேஷன் ஜெனரல் லிமிட்டெட் (SLICGL) நிறுவனம் 2024ஆம் ஆண்டில் சிறந்த செயற்றிறனை வெளிப்படுத்தியிருப்பதுடன், காப்புறுதித்துறைச் சந்தையின் முன்னணியாளர் என்ற ரீதியில் தனது பலத்தையும் விரிவாற்றலையும் மீள உறுதிப்படுத்தியுள்ளது. SLICGL நிறுவனம் தனது நிலையான நிதி ஸ்திரத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் வரிவிதிப்புக்கு முன்னராக இலாபமாக ரூபா 4 பில்லியனைப் பதிவுசெய்திருப்பதுடன், வரிவிதிப்புக்குப் பின்னரான இலாபமாக ரூபா 3.3 பில்லியனைப் பதிவுசெய்துள்ளது. 2024 டிசம்பர் 31ஆம் திகதியின்போது நிறுவனம் எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூபா 25 பில்லியன் பதிவாகியிருப்பதுடன், அதன் சொத்து மதிப்பு ரூபா 51 பில்லியனாக விரிவாக்கப்பட்டிருப்பதன் மூலம் நிதிநிலைமை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் காப்புறுதிப் பிரிவில் ஸ்ரீ லங்கா மோட்டார் பிளஸ் காப்புறுதி 20% சந்தைப் பங்கை உறுதிப்படுத்தி ரூபா 14 பில்லியனைத் தவணைக் கட்டண வருமானமாகப் பெற்றிருப்பதுடன், இலங்கையின் முதல் தரமான மோட்டார் காப்புறுதி வழங்குநர் என்ற தனது ஸ்தானத்தைத் தொடர்ச்சியாக ஆறாவது வருடமாகவும் நிலைநிறுத்தியுள்ளது. இந்தப் பிரிவு தொடர்ச்சியான ஆதிக்கத்தை வெளிப்படுத்தி 5.3% வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

அதேநேரம், மோட்டார் அல்லாத பிரிவு தவணைக் கட்டண



வருமானமாக ரூபா 11 பில்லியன் என்ற இலக்கை அடைந்திருப்பதுடன், 15% வளர்ச்சியைப் பதிவுசெய்து இது இந்தப் பிரிவில் தொழிற்றுறை வளர்ச்சி வீதத்தை விட அதிகமாக அமைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் நிறுவனம் 9 % வளர்ச்சியைப் பதிவு செய்து, 19.4% சந்தைப் பங்கைக் கொண்டு சந்தையின் முன்னோடியாகத் திகழ்கின்றது. இது தொழிற்றுறையின் சராசரியை விஞ்சும் வகையில் அமைந்திருப்பதுடன், நிறுவனத்தின் பரந்துபட்ட காப்புறுதித் தயாரிப்புகள் மற்றும் வாடிக்கையாளர்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை என்பவற்றின் சிறப்பை எடுத்துக்காட்டும் விதத்தில் அமைந்துள்ளது.

காப்புறுதி உரிமையாளர்களுக்கான அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தும் வகையில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஜெனரல் நிறுவனம் 2024ஆம் ஆண்டில் ரூபா10.5 பில்லியன் உரிமைகோரல் கொடுப்பனவுகளை வழங்கியிருப்பதுடன், இது தனது கடமைகளை நிறைவேற்றி வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான பாதுகாப்பை வழங்குதில் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

## 20 வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை (JKF)



ஜோன் கீல்ஸ் குழுமத்தின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு (CSR) அமைப்பான ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை (JKF) தனது 20 வருடப் பூர்த்தியைக் கொண்டாடியது. 2025 ஏப்ரல் 25 ஆம் திகதி தனது பிரதான பங்காளர்களான அரசாங்க, அரச சார்பற்ற, தனியார் மற்றும் கல்விசார் துறையைச் சேர்ந்த அமைப்புகள், ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற முகவர் அமைப்புகள் மற்றும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்காக விசேட நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. 2005 மார்ச் 28ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது முதல், இலங்கையின் நிலைபேறான வளர்ச்சி மற்றும் சமூகங்களுக்கு வலுவூட்டலில் JKF முன்னோடியாகத் திகழ்கிறது.

இலங்கையிலுள்ள முதலாவது கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு அமைப்புகளில் ஒன்றாகத் திகழும் JKF, தேசிய முன்னுரிமைகள், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் ஐக்கிய நாடுகள் குளோபல் கம்பெக்ட் கொள்கைகளின் பிரகாரம், ''நாளைய தேசத்தை வலுப்படுத்துவோம் எனும் எமது நோக்கத்துக்கமைவாக தாக்கத்தை ஏற்படுத்தும், நிலைபேறான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது" - என ஜோன் கீல்ஸ் குரூப் தலைமை அதிகாரி கிரிஷான் பாலேந்திரா தெரிவித்தார்.

"கடந்த காலங்களில், தேவைகளைக் கொண்ட எமது சமூகங்களுக்கு நீண்ட கால அடிப்படையிலான திட்டங்களை முன்னெடுப்பதில் JKF தன்னை அர்ப்பணித்திருந்ததுடன், சுமார் 9 மில்லியனுக்கும் அதிகமான நபர்களைச் சென்றடைந்திருந்தது. ரனாலவில் எமது எலிபன்ட் ஹவுஸ் தொழிற்சாலையை சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கடதாசி சார்ந்த தயாரிப்புகளை உற்பத்தி செய்வது பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. ஹிக்கடுவயில், Hikka Tranz by Cinnamon உடன் கைகோர்த்து, அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் பற்றிக் உற்பத்தி தொடர்பான திறன்களை மேம்படுத்தியிருந்தோம். இந்தப் பயணத்தை முன்னெடுப்பதில் எமது அணியினர் எமக்கு பக்கபலமாக அமைந்திருந்ததுடன், கடந்த சில தசாப்தங்களில் எமது DNA இல் ஓர் அங்கமாக அது எவ்வாறு மாற்றமடைந்துள்ளது என்பது மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது" - என அவர் மேலும் தெரிவித்தார்.

## பறிமுதல் செய்யப்பட்ட ஹெரோயினை அகற்றுவதற்கு போதைப்பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து செயற்படும் INSEE Ecocycle



போதைப் பொருட்களுக்கு எதிராகத் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் மற்றும் அதனால் தேசத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தலை ஒழிப்பதில் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவதில் தடம் பதித்துள்ள துறைசார் முன்னணி கழிவு முகாமைத்துவத் தீர்வு வழங்குநரான INSEE Ecocycle Lanka (தனியார்) நிறுவனம் பறிமுதல் செய்யப்பட்ட 494.048 கிலோ கிராம் ஹெரோயினை இணை செயலாக்கத் தொழில்நுட்பத்தின் ஊடாக பொறுப்பான முறையில் அகற்றுவதற்கு இலங்கை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை என்பவற்றுடன் மீண்டும் ஒருமுறை இணைந்துகொண்டது.

2018, 2019 மற்றும் 2023ஆம் ஆண்டு ஏறத்தாழ 1,804 கிலோ கிராம் அபாயகர போதைப்பொருட்கள் வெற்றிகரமாக அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து INSEE Ecocycle நிறுவனம் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரசபைகளுடன் இணைந்து ஏற்படுத்திய நான்காவது கூட்டாண்மையாக இது அமைந்தது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளின் கடுமையான கண்காணிப்பின் முன்நிலையில் புத்தளத்திலுள்ள சீமெந்துத் தொழிற்சாலையில் ஏப்ரல் 28ஆம் திகதி சுற்றுச்சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், பாதுகாப்பான முறையில் இந்தப் போதைப் பொருட்கள் அழிக்கப்பட்டன.

தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கையின்போது பறிமுதல் செய்யப்பட்ட இந்தப் போதைப் பொருட்கள் அழிக்கப்படுவதற்கு முன்னர் அவை சட்ட மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளுக்கு இணங்குகின்றமை அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் சட்ட அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டன.

INSEE சீமெந்து ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நந்தன ஏக்கநாயக்க விளக்கமளிக்கையில், "இந்த விடயத்துக்குத் தீர்வை வழங்கக்கூடிய திறனை உள்ளடக்கிக் கொண்ட இலங்கையில் உள்ள ஒரேயொரு ஒன்றிணைந்த சீமெந்துத் தயாரிப்புத் தொழிற்சாலையான INSEE சீமெந்து நிறுவனமெனக் கொண்டுள்ளது. தேசிய நோக்கத்தை வலியுறுத்தி போதையற்ற நாட்டை உருவாக்குவதற்கு நாம் பெருமையுடன் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். இலங்கையில் உள்ள சீமெந்து சூளை இணைந்த செயற்பாட்டு வசதியைக் கொண்ட தொழிற்சாலையாக எமது புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை விளங்குகின்றது. எமது அனைத்துப் பங்குதாரர்களினதும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பிலேயே INSEEசீமெந்து எப்போதும் கவனஞ் செலுத்துகின்றது. பொறுப்பு வாய்ந்த கூட்டு நிறுவனம் என்ற ரீதியில், மிகுந்த கவனத்துடன், தொழில்சார் நிபுணத்துவத்துடன் தீங்குவிளைவிக்கும் பொருட்களைப் பாதுகாப்பாக அழிப்பதை உறுதிசெய்வதில் எமது ஆதரவை வழங்குவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்" - என்றார்.

## வணிக வகுப்பு சேவைகளை ஆரம்பித்துள்ள FitsAir

இலங்கையில் தனியாருக்குச் சொந்தமான முதலாவது சர்வதேச விமான சேவையாகவும் குறைந்த கட்டணங்களுடனான விமானப் பயணங்களுக்கு முன்னணி நிறுவனமாகவும் திகழ்ந்து வருகின்ற FitsAir, 2025 ஏப்ரல் 25 முதல் அமுலுக்கு வரும் வகையில் தனது பிராந்திய சேவை வலையமைப்பில் வணிக வகுப்பு (Business Class) சேவைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளமை குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது. சிக்கனம் மற்றும் நம்பிக்கை என்ற அதன் பிரதான வாக்குறுதிக்கமைவாக உயர்வான சிறப்பம்சங்களையும் உள்ளிணைத்து FitsAir இன் வளர்ச்சிப் பயணத்தில் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாதனையாக இந்த நகர்வு மாறியுள்ளது.

தற்காலத்தில் வணிக நோக்கங்களுக்காக




பிரயாணம் செய்கின்றவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ள இச்சேவை முன்னுரிமை அடிப்படையிலான check-in, விரைவான boarding வசதி மற்றும் பிரயாணப் பொதிகளை விரைவாகக் கையாளுதல் போன்ற வசதிகளுடன் நெகிழ்வுடனான பிரயாண டிக்கட் மீள் முன்பதிவு மற்றும் இரத்துச் செய்யும் வாய்ப்புகள் போன்றவை அடிக்கடி பிரயாணம் செய்கின்றவர்களுக்கு சௌகரியத்தை மேம்படுத்துகின்றன. விமான நிலையத்தில் விமானத்தில் ஏறுவதற்கு முன்பதாக ஓய்வாகவும் சௌகரியமாகவும் இருப்பதற்கு உயர்மட்ட வசதிகள் கொண்ட ஓய்வறைகளையும் (lounge) அவர்கள் பயன்படுத்த முடியும்.

விமானப் பிரயாணத்தின் போது 40 கிலோ பிரயாணப் பொதியும் கையில் எடுத்துச் செல்வதற்கு 10 கிலோ பிரயாணப் பொதியும் தம்முடன் கொண்டு செல்லும் வகையில் தாராளமான வசதி வணிக வகுப்பு பிரயாணிகளுக்கு கிடைக்கப்பெறுவதுடன், தாம் விரும்புகின்ற ஆசனத்தை மேலதிக கட்டணமின்றித் தெரிவு செய்தல், சிறப்பான பொழுதுபோக்கு உள்ளடக்கங்களைக் கொண்ட தனிப்பட்ட பொழுதுபோக்கு சாதனங்கள் போன்றவையும் கிடைக்கப்பெறுகின்றன.



## இலங்கை வங்கியின் 'குட்டிப் பிக்காசோ' ஓவியப் போட்டி




இலங்கை வங்கி 2025 ஏப்ரல் 03ஆம் திகதி அதன் தலைமையகத்தில் 'குட்டிப் பிக்காசோ' தேசிய விருது விழாவை நடத்தியது. இதையடுத்து ஏப்ரல் 03 முதல் 05 வரை மூன்று நாள் பொது ஓவியக் கண்காட்சியும் நடை பெற்றது. இந்த நிகழ்வு, இலங்கை முழுவதுமுள்ள குழந்தைகளின் படைப்பாற்றலைக் கொண்டாடியது. நாடு முழுவதிலிருந்தும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1,32,000 க்கும் மேற்பட்ட கலைப்படைப்புகள் இதில் இடம்பெற்றன. மதிப்பீட்டு செயல்முறை முடிவில், 73 மாணவர்கள் தங்கள் கற்பனையும் திறமையும் மிளிரும் கலைப்படைப்புகளுக்காக தேசிய வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 715 மாணவர்கள் மாகாண மட்டத்தில் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விருதுகளும் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கிளைச் செயற்பாடுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர் ப்ரியல் சில்வா "லிட்டில் பிக்காசோ போன்ற நிகழ்வுகள், சமூகத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் இலங்கை வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. இது நிதிச் சேவைகளைத் தாண்டி, இளம் மனங்களுக்கு கனவுகளை நனவாக மாற்றும் ஒரு மேடையைக் கொடுக்கிறது" - எனக் கூறியதோடு இளம் ஓவியர்களின் திறமையை ஒரு தேசிய விழாவாக உருமாற்றிய அமைப்பாளர்கள் மற்றும் குழுவினரின் அர்ப்பணிப்பையும் வெகுவாகப் பாராட்டினார்.




# இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறக்கத் தடை!

# பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க இந்திய முப்படைகளுக்கு முழு சுதந்திரம்

## பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பு



பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க முப்படைகளுக்கும் முழு சுதந்திரமளிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இதனால் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவுகிறது. எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடந்து இந்திய எல்லைக்குள் அத்துமீறி பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டது. இதையடுத்து இந்திய எல்லையில் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பாகிஸ்தான் தரப்பில் இந்திய விமானங்கள் அந்த நாட்டின் வான்வெளியில் பறக்க அண்மையில் தடை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பதிலடி தரும் வகையில் இந்திய மத்திய அரசு, பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியில் பறக்க தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த 22ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம், இந்தியா மட்டுமன்றி சர்வதேசளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசு தரப்பில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியில் பறக்க தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. அந்தவகையில் எதிர்வரும் மே 24ஆம் திகதி இந்திய நேரப்படி அதிகாலை 5.29 வரையில் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியைப் பயன்படுத்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''பாகிஸ்தான் விமானங்கள், அந்த நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் இயக்கும் விமானங்கள், இராணுவ விமானங்களென எந்தவிதமான வானூர்தியும் இந்திய வான் எல்லையைப் பயன்படுத்தத் தடை செய்யப்பட்டுள்ளது'' என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட திகதியை நெருங்கும் சமயத்தில் அது திருத்தப்பட வாய்ப்புள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கெனவே நிதி நெருக்கடியால் பாகிஸ்தான் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் இந்த நடவடிக்கை பாகிஸ்தான் விமான நிறுவனங்களுக்கு மேலும் நெருக்கடியைத் தருமெனவும் பயண நேரத்தை அதிகரிக்கச் செய்யுமெனவும் கூறப்படுகிறது. குறிப்பாக, பாகிஸ்தானிலிருந்து தென்கிழக்காசியாவுக்குச் செல்லும் விமானங்கள் இந்திய வான்வெளியை தவிர்க்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஹல்காம் தாக்குதலுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை

## மறுக்கும் பாகிஸ்தான்

பஹல்காம் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானை இந்தியா குற்றஞ்சாட்டி வருவதுடன், அந்நாட்டுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது. இந்நிலையில், பஹல்காம் தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லையென பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பஹல்காம் தாக்குதல் உயிரிழப்புகளுக்கு தாங்களும் கவலையை வெளியிட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இந்தியாவுடனான பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், நிதானத்தைக் கடைப்பிடிப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. ஆனால், சர்வதேச சட்டத்தின் கீழ் தற்காப்புக்கான அதன் உரிமையைப் பயன்படுத்தி, தாக்கப்பட்டால் அது 'வலுவாகவும்' 'தீர்க்கமாகவும்' பதிலளிக்குமென்று பாகிஸ்தான் எச்சரித்துள்ளது.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லையென பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் மீண்டும் தெரிவித்துள்ளது. முன்னதாக அந்நாட்டு இராணுவ செய்தித் தொடர்பாளர், வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் உள்ளிட்டோர் செய்தியாளர்களிடம் கூட்டாக இதைத் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில், ''எந்த வகையிலான பயங்கரவாதத்தையும் பாகிஸ்தான் கண்டிக்கிறது. அப்பாவி மக்கள் உயிரைப் பறிப்பதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. பஹல்காம் தாக்குதல் உயிரிழப்புகளுக்கு நாங்களும் கவலையை வெளியிட்டிருக்கிறோம். நாங்களும் எங்கள் இரங்கலை தெரிவித்தோம்'' என்றனர்.

பஹல்காம் தாக்குதலுக்கு ஒரு சிறிய ஆதாரமும் இல்லாமல், நம்ப முடியாத வேகத்தில் பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாகத் தெரிவித்த அவர்கள், பாகிஸ்தானுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும் நாங்கள் ஆரம்பத்திலிருந்தே அதைத்தான் தெரிவித்து வருகிறோம் என்றும் கூறினர்.

அதேநேரம் ''பாகிஸ்தானை சீண்டினால் பதிலடி கொடுக்கப்படும்'' என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

# இந்தியா - பாகிஸ்தானுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை



பஹல்காம் தாக்குதல் விவகாரம் தொடர்பில் இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்டிருக்கும் பதற்றத்தைத் தணிக்கும் நோக்கில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆகியோருடன் உரையாடியுள்ளார்.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதல் விவகாரம் தொடர்பான விசாரணைக்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென்று அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

பஹல்காம் தாக்குதலையடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இதையடுத்து, சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைப்பு, பாகிஸ்தானியருக்கான விசா இரத்து, அட்டாரி எல்லை மூடல், பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய பாதுகாப்பு அதிகாரிகள் வெளியேற்றம், இஸ்லாமாபாத்திலுள்ள இந்தியத் தூதரகத்தில் முப்படை ஆலோசகர்கள் பதவியிடங்கள் இரத்து உள்ளிட்ட முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சிந்து நதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதால் அதை போராகக் கருதுவோமென பாகிஸ்தான் தெரிவித்தது. இதனால் இந்திய - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தான் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்கா, ''இந்தியா மேற்கொள்ளும் அனைத்து விசாரணை நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். இந்தியாவும் பாகிஸ்தானும் பதற்றங்களைக் குறைத்து, தெற்காசியாவில் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் ஒத்துழைக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளது.

# இஸ்ரேலை மிரட்டும் காட்டுத்தீ; தேசிய அவசர நிலை அறிவிப்பு

## 23 பேர் பாதிப்பு; பல்லாயிரக்கணக்கானோர் வெளியேற்றம்





இஸ்ரேலின் பல்வேறு நகரங்களில் காட்டுத் தீ தொடர்ந்து பரவி வருகின்றது. இதனால் இஸ்ரேலில் தேசியளவில் அவசரநிலை அறிவிக்கப்பட்டதுடன், அந்நாட்டு அரசு சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரியுள்ளது.

இஸ்ரேலின் மிகவும் மோசமான பேரிடர்களில் ஒன்றாகக் கருதப்படும் இக்காட்டுத் தீயானது போரில் பலியான இஸ்ரேலின் வீரர்களுக்கான நினைவு நாளான நேற்றுமுன்தினம் (30) முதல் பல்வேறு நகரங்களுக்குப் பரவி வருகின்றது.

அங்கு நிலவும் வறண்ட வானிலை மற்றும் வீசும் பயங்கரக் காற்றால் இக் காட்டுத் தீ விரைவில் ஜெருசலம் நகரை அடையக்கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவிக்கையில், இந்தக் காட்டுத் தீயானது தேசிய அளவிலான அவசரநிலை. ஜெருசலமைப் பாதுகாப்பதற்கே தற்போது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும்'' என்று எச்சரிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், அங்கு கூடுதலான தீயணைப்பு வாகனங்கள் இயக்கப்பட்டு, தீ பரவாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், தலைநகர் டெல்அவிவ் மற்றும் ஜெருசலம் ஆகிய நகரங்களுக்கிடையிலான முக்கிய நெடுஞ்சாலையில் காட்டுத் தீ பரவியதால் அங்கு சென்றுகொண்டிருந்த வாகனங்களை நடுவழியிலேயே விட்டுவிட்டு மக்கள் ஓடும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் வெளியேற்றப்பட்டதுடன், இஸ்ரேலின் பல்வேறு நகரங்களில் மக்கள் வெளியேறத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த இஸ்ரேலிய தீயணைப்புப் படையுடன், அந்நாட்டு இராணுவமும் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

மேலும், தீக்காயங்களினாலும் புகையாலும் பாதிக்கப்பட்ட 23 பேரில் 13 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் நூற்றுக்கணக்கான உயிர்கள் ஆபத்தான சூழலிலுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், காட்டுத்தீ பரவிவரும் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மணிக்கு சுமார் 70 கி.மீ. வேகத்தில் பரவி வரும் இந்தக் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த ஹெலிகொப்டர் மற்றும் விமானங்களின் உதவியுடன் 120 தீயணைப்புக் குழுக்கள் அந்நாடு முழுவதும் போராடிவரும் சூழலில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் கூடுதலாக 22 குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிரீஸ், சைப்ரஸ், குரோஷியா, இத்தாலி மற்றும் பல்கேரியா உள்ளிட்ட நாடுகளை இஸ்ரேல் உதவிக்காக அணுகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா மீண்டும் அதிரடி; கப்பலிலிருந்து ஏவுகணை சோதனை





வடகொரியா புதிய தாக்குதல் கப்பலிலிருந்து முதல் ஏவுகணை சோதனை மேற்கொண்டுள்ளது.

வடகொரியா கடந்த வாரம் தனது போர்க்கப்பல் துறையில் கட்டமைக்கப்பட்ட மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்களைக்கொண்ட 5000 தொன் எடை கொண்ட புதிய தாக்குதல் போர்க்கப்பலை வெளியிட்டது. ஜனாதிபதி கிம் ஜோங் உன் இதனை மேற்பார்வையிட்டார்.

சூப்பர் சோனிக் மற்றும் மூலோபாய கப்பல் ஏவுகணைகள், விமான எதிர்ப்பு ஏவுகணை, தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் மின்னணு ஜாமிங் துப்பாக்கிகளின் சோதனைகளை இவ்வார தொடக்கத்தில் ஜனாதிபதி கிம் பார்வையிட்டார். இந்நிலையில், புதிய தாக்குதல் கப்பலிலிருந்து முதல் ஏவுகணை சோதனையை வடகொரியா நேற்றுமுன்தினம் நடத்தியது.தொடர்ந்து கப்பலின் சக்திவாய்ந்த தாக்குதல் ஆயுதங்கள் மற்றும் வழக்கமான பாதுகாப்புக் கவசங்களை கிம் பாராட்டினார்.





*தொழிலாளர் தேசிய சங்கத்தின் 60 ஆவது வருட பூர்த்தியும் மேதின விசேட பூஜை வழிபாடுகளும் கொடியேற்றும் நிகழ்வும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பிலிப் தலைமையில் நேற்று (01) ஹட்டன் காரியாலய வளாகத்தில் நடைபெற்றது.*

*(தலவாக்கலை நிருபர்)*

# செங்கொடிச் சங்கம் அரசுக்கு முன்வைத்த கோரிக்கை

*(ஜே.எம்.ஹாபீஸ்)*

“தொழிலாளர்கள் பெறும் ஊதியம் அவர்களை தொடர் வறுமைக்குள் தள்ளிவிடுகின்றது” - என செங்கொடிச் சங்கம் தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் (30) கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் செங்கொடிச்சங்கம், தனது மேதினச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. அது வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“எங்கள் தோட்டம் மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்களை சுரண்டுவதை நிறுத்தவேண்டும்.

எமது குரல் இந்த மே தினத்தில் மிகுந்த கவலையுடன் ஒலிக்கின்றது. இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான இலங்கையின் தோட்ட மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மனிதாபிமானமற்ற நிலைமைகளின் கீழ் தொடர்ந்து துன்பப்படுகிறார்கள்.

2025ஆம் ஆண்டிலும் எங்கள் தொழிலாளர்கள் பெறும் ஊதியம் அவர்களை தொடர் வறுமைக்குள் தள்ளிவிடுகின்றது. தொழிலாளர்கள் இன்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல் வேலை செய்கிறார்கள். வேலைத்தளத்தில் மலசலகூட வசதிகள் கூட இல்லை. இது வெறும் புறக்கணிப்பு அல்ல. இது முறையாகத் திட்டமிடப்பட்ட சதியென நாம் கருதுகின்றோம்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தோட்ட மற்றும் தொழிற்சாலை நிறுவனங்கள், தொழிலாளர்களின் வாழ்க்கையை நசுக்குவதன் மூலம் தங்கள் இலாபத்தை அதிகரித்து வருகின்றன. கம்பனிகள் தொழிலாளர்களின் வறுமையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றன.

தொழிலாளர்களை முறைசாரா மற்றும் தற்காலிக தொழிலாளர்களாக வைத்துக்கொள்வதன் மூலம், அவர்களின் உரிமைகள், பாதுகாப்பு போன்றவை புறக்கணிக்கப்படுகின்றன. இது தற்செயலாக நடப்பதில்லை. இது தொழிலாளர் படையின் மீது நன்கு திட்டமிடப்பட்டு பிரயோகிக்கப்படும் தாக்குதலாகும் எனக் கருதுகிறோம்.

தொழிலாளர்களுக்கு தொழில் நிச்சயமற்ற தன்மை, அவமரியாதைகள் மற்றும் சுரண்டல்களே காணப்படுகின்றன. தோட்ட நிறுவனங்கள் தமக்கு



வாய்ப்பு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிரந்தர தொழிலாளர்களை ஒப்பந்த வேலை, தற்காலிக வேலைகள், அவுட்சோர்சிங், மேன்பவர் என மிக சூட்சுமமான முறைகளுக்குள் உட்புகுத்தி தொழிலாளர்களுக்கு பொறுப்புக் கூறுவதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் தொழிற்சங்கங்களைப் பலவீனப்படுத்தவும் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றன.

இம் மே தினத்தில் பின்வரும் கோரிக்கைகளை அரசுக்கு முன்வைக்கின்றோம்.

01.பெருந்தோட்டத் துறை மற்றும் தொழிற்சாலைகளிலுள்ள அனைத்து முறைசாரா மற்றும் தற்காலிக தொழிலாளர் நடைமுறைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

02.அனைத்து தோட்ட மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் தொழில் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

03.பாதுகாப்பான வேலைத்தள சுகாதாரம் உட்பட அடிப்படை வேலைத்தள வசதிகளைத் தாமதமின்றி வழங்க வேண்டும்.

04.தொழிலாளர்களின் சுயமரியாதையை மதித்து, தேசிய பொருளாதாரத்தில் அவர்களின் மையப்பங்கை அங்கீகரிக்க வேண்டும்.

05. அனைத்து தோட்ட மற்றும் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் உண்மையான, வாழ்க்கை ஊதியத்தை உறுதிசெய்ய வேண்டும். எந்தத் தொழிலாளியும் வறுமையில் வாழக்கூடாது.

மேற்படி அறிக்கையில் செங்கொடிச் சங்கப் பொதுச் செயலாளர் எஸ்.ஏ. தேவேந்தி குமாரி மற்றும் அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமி ஆகியோர் அரசுக்கு கோரிக்கையொன்றை முன்வைத்து கையெழுத்திட்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

## நீர் நிலைகளில் நீராடுவோரின் கவனத்துக்கு....

*(எம்.ஏ.எம்.ஹசனார்)*

ஊவா மாகாணத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக அப்பகுதிகளிலுள்ள நீர் நிலைகள் மற்றும் ஏரிகள் போன்றவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.


எனவே, ஊவா மாகாணத்திலுள்ள நீர் நிலைகளைப் பார்வையிட வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நீர்வீழ்ச்சிகளில் இறங்கவோ நீராடவோ வேண்டாம் என இடர் முகாமைத்துவ மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இம்மாகாணத்தின் பம்பரகந்தை நீர்வீழ்ச்சி, தியலுவ நீர்வீழ்ச்சி, இராவணாஎல்ல நீர் வீழ்ச்சி, துங்கிந்த நீர் வீழ்ச்சி போன்ற நீர் நிலைகளின் வெள்ள நீர்பெருக்கெடுத்து ஓடுவதால் இவற்றைப் பார்வையிடச் செல்பவர்கள் மிக அவதானமாக இருக்கவேண்டுமெனவும் இடர் முகாமைத்துவ மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



# வள்ளுவர்புரம் ஸ்ரீ அக்கினி காளி அம்மன் மகா கும்பாபிஷேகம் இன்று





*(செ.திவாகரன்)*

நுவரெலியா, கந்தப்பளை நோனா தோட்டம் வள்ளுவர்புரம் அருள்மிகு ஸ்ரீ அக்கினி காளி அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ சம்புரோக்ஷன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழா 2025 நேற்று முன்தினம் (30) புதன்கிழமை காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இரண்டாவது நாளான நேற்று (01) வியாழக்கிழமை காலை 7.30 மணி முதல் விநாயகர் வழிபாட்டுடன் புண்ணியாக வாஜனம் நடைபெற்று தொடர்ந்து அடியார்கள் விக்கிரகங்களுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்றது .

இன்றைய தினம் (02) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி யாகசாலை பூஜைகள் நடைபெற்று காலை 10 மணி முதல் 10.15 மணி வரை வரும் சுப முகூர்த்த சுப வேளையில் அருள்மிகு ஸ்ரீ அக்னிகாளி அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேக குட முழுக்கு விழா நடைப்பெற்று மகேஸ்வர பூஜையுடன் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

# சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் யாழில்

*(பு.கஜிந்தன்)*

2025ஆம் ஆண்டில் நிறைவேற்றவுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் (30) பி.ப. 02.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.



இக்கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர்,

‘‘யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இவ்வாண்டு 13,120 மில்லியன் ரூபா நிதி வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை உரிய காலத்துக்குள் நிறைவேற்றி முடிக்கவேண்டும். திட்டங்கள் நிலைத்திருக்கக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும். திட்டங்களை அமுல்படுத்திய பின்னர் அதனைச் சரியான முறையில் பாராமரிக்கும் பொறிமுறையையும் பேணவேண்டும் என்றார்.

மேலும், காரைநகர், தெல்லிப்பளை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான அரசாங்க அதிபரால் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

தெல்லிப்பளை - கீரிமலை கடற்கரைப் பகுதியில் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்கு இடையூறாக உள்ள கற்களை அகற்றி பாதுகாப்பான வகையில் பிதிர்க்கடன் மேற்கொள்வதற்கான பொருத்தமான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. குறிப்பாக, கடற்கரையில் காணப்படும் கற்களை அகற்றி கடற்கரையை சீர்செய்வதற்காக அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கமைவாக ரூபா 35 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்ய அமைச்சால் விடுவிக்கப்பட்டுள்ளதால் அத்திட்டத்தைச் சிறப்பாகவும் விரைவாகவும் நிறைவேற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும், காங்கேசன்துறை கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவின் பகுதி கடலரிப்பால் பாதிக்கப்பட்டு சிறுவர் பூங்காவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் அவ்விடத்துக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனாலும் அதனைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

காரைநகர் கசூரீனா கடற்கரையை சிறந்த வசதிகள் கொண்ட கடற்கரையாக மாற்றுவதற்கு ஒதுக்கிடப்பட்ட நிதிக்கமைய, நேரடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் இணைந்து களவிஜயம் மேற்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தீவக சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில், ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாக குறிப்பாக, அனலைதீவிலுள்ள புளியந்தீவு படகுத்துறை, ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் படகுத்துறை புனரமைப்பு செய்வது தொடர்பாகவும் ஊர்காவற்றுறை படகுத்துறைப் பகுதியில் மரம் நாட்டி சுற்றுலாப் பயணிகள் இருக்கத்தக்க வகையில் இருக்கைகள் அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், நேரடியாக களவிஜயம் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி)க.ஸ்ரீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், பிரதம பொறியியலாளர் க.திருக்குமார், தெல்லிப்பளை, காரைநகர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## கூரை வேய்ந்த நபர் கீழே விழுந்து மரணம்!

*(பு.கஜிந்தன்)*

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கூரை வேய்வதற்கு ஏறிய நிலையில் கீழே விழுந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (30) உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் அன்ரனிதாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த 20ஆம் திகதி கூரை வேய்வதற்கு ஏறியுள்ளார். இதன்போது தவறுதலாக கூரையிலிருந்து விழுந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். அங்கிருந்து மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அன்று மாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

## மன்னார் இலங்கை பொதுப் போக்குவரத்துச் சாலையின் அவலம்

### ஆராய ஜெகதீஸ்வரன் எம்.பி. கள விஜயம்

*(ஜோசப் நயன்)*

மன்னார் இலங்கை பொதுப் போக்குவரத்துச் சாபையின் அவலநிலை தொடர்பில் ஆராய்வதற்கான கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று முன்தினம் (30) இலங்கை பொதுப் போக்குவரத்துச் சபைத் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள மன்னார் போக்குவரத்துச் சாலையில் பல கோடி ரூபா பெறுமதியான பஸ்கள் உரிய பராமரிப்பின்றி நிறுத்தப்பட்டு கவனிப்பாரின்றி துருப்பிடித்த நிலையில் காணப்பட்டுள்ளன. குறித்த வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் பல வருடங்களாகக் கொள்வனவு செய்யப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக மன்னார் போக்குவரத்துச் சாலையினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், மன்னார் மாவட்டத்திலிருந்து பல தூரப் பகுதிகளுக்கான சேவை நீண்டகாலமாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போதும் கொழும்பு, கண்டி போன்ற தூரப் பகுதிகளுக்கு மிகவும் பழுதடைந்த பஸ்களையே மன்னார் போக்குவரத்துச் சாலை பயன்படுத்தி வருகின்றது.

இவ்வாறான நிலையில், குறித்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் கண்காணிப்பு விஜயத்தின் பின் கருத்துத் தெரிவிக்கையில்,

‘‘மன்னார் பொதுப் போக்குவரத்துச் சாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. விரைவில் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதேநேரம், செயலிழந்துள்ள பஸ்களை மீளப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான உதிரிப்பாகங்களை விரைவில் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவற்றில்




ஐந்து திருத்தப்பட்ட எஞ்சின்கள் விரைவில் மன்னார் போக்குவரத்துச் சாலைக்கு கையளிக்கப்படவுள்ளன.

அதேநேரம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு பொதுப் போக்குவரத்துச் சாலைகளின் நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. பல கோடி பெறுமதியான அரச சொத்துகள் விரயம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலைக்கான காரணம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதனடிப்படையில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்’’ – என்றார்.

மன்னார் போக்குவரத்துச் சாலையின் இந்த நிலை தொடர்பிலும் மன்னார் போக்குவரத்துச் சாலையில் பயன்படுத்தப்படும் பஸ்களின் நிலை தொடர்பிலும் நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பிலும் பல வருடங்களாக முறைப்பாடுகள் தெரிவித்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், கடந்த இரண்டு வருடங்களாக எந்தவொரு உயரதிகாரிகளும் மன்னார் போக்குவரத்துச் சாலைக்கு விஜயம் மேற்கொண்டு மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாகவோ பஸ் சாலையின் நிலை தொடர்பாகவோ பார்வையிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது!

*(வவுனியா நிருபர்)*

வவுனியா நகரத்தில் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் வவுனியா பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா - யாழ். வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகில் வாகனமொன்றில் வந்த இருவர் உணவுப்பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

குறித்த வாகனத்தை சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை செய்ய முற்பட்டபோது விற்பனையாளர்களால் அவர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் சற்றுநேரம் குழப்பநிலை ஏற்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகில் தின்பண்டங்களை விற்பனை செய்வதனால், உணவில் நச்சுவாயுக்கள் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதுடன், அந்தப் பகுதியில் கழிவுநீர் வழிந்தோடும் கால்வாயும் காணப்படுகின்றது. எனவே, இவ் வாகனத்தை வேறு பகுதிக்கு எடுத்துச்சென்று அங்கே விற்பனை செய்யுமாறு சுகாதாரப் பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்ட போதும் விற்பனையாளர்கள் அதனை ஏற்க மறுத்தனர்.

இதனையடுத்து சுகாதாரப் பரிசோதகர்களால் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் குறித்த இருவரையும் கைதுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் வாக்காளர் அட்டைகள் மீட்பு: கைதுசெய்யப்பட்ட இருவருக்கு விளக்கமறியல்

*(சி.திவியா)*

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளரின் சகோதரனின் வியாபார நிலையமொன்றிலிருந்து ஒருதொகை வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆளும் கட்சி வேட்பாளர் ஒருவரின் சகோதரனும் தபால் ஊழியரொருவரும் பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,

வவுனியா, பூந்தோட்டம் பகுதியிலுள்ள பலசரக்கு வியாபார நிலையமொன்றில் ஒருதொகை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குரிய வாக்காளர் அட்டைகள் இருப்பதாகத் தேர்தல் திணைக்களத்துக்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், அங்கிருந்து ஒருதொகை வாக்காளர் அட்டைகளையும் மீட்டுள்ளனர். அதனை உடைமையில் வைத்திருந்த குற்றத்துக்காக அவ்வட்டாரத்தில் ஆளும் கட்சியில் போட்டியிடும் வேட்பாளரின் சகோதரனான வியாபார நிலையத்தின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டதுடன், அந்தப் பகுதிக்குரிய தபால் ஊழியரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில், எதிர்வரும் 06ஆம் திகதி வரை அவர்கள் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## யாழில் வீதியால் சென்ற நபர் மயங்கி விழுந்து உயிரிழப்பு!

*(பு.கஜிந்தன்)*

யாழ்ப்பாணம், கோண்டாவில் வீதியால் பயணித்த முதியவரொருவர் வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதன்போது நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி கலியுகவரதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் வறுமை காரணமாக நேற்று முன்தினம் காலை உணவு அருந்தாமல் வெளியே சென்றுள்ளார். மதியம் கோண்டாவில் வீதியால் பயணித்தவேளை திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

பின்னர் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

# ரியல் மெட்ரிட்டுக்கு விடைகொடுக்கும் பயிற்சியாளர் அன்செலாட்டி



ஸ்பானிஷ் கிண்ணத் தொடரின் தோல்வியின் எதிரொலி மற்றும் தொடர்ச்சியான சொதப்பலை அடுத்து ரியல் மெட்ரிட் அணியின் பயிற்சியாளர் கார்லோ அன்செலாட்டி அணியில் இருந்து விலகுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கார்லோ அன்செலாட்டி கடந்த 2021 ஜூன் 1ஆம் திகதி பயிற்சியாளராகச் சேர்ந்த கார்லோ அன்செலாட்டியின் ஒப்பந்தம் 2026 வரை இருக்கிறது. எனினும் ரியல் மெட்ரிட் அணியை விட்டு ஜூன் மாதம் விலகுவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

கார்லோ அன்செலாட்டி தலைமையில் ரியல் மெட்ரிட் அணி 3 சம்பியன்ஸ் லீக், 2 லா லிகா பட்டங்களை வென்றுள்ளது. கடந்த சில மாதங்களாக ரியல் மெட்ரிட் அணி மோசமாக விளையாடி வருகிறது. இருப்பினும் சம்பியன்ஸ் லீக் வெளியேற்றம் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் ஜூன் மாதம் கிளப் உலகக்கிண்ணம் நடைபெற இருப்பதால் புதிய பயிற்சியாளரை நியமிக்க இருக்கிறார்கள். முன்னாள் ரியல் மெட்ரிட் வீரரும் லெவர்குசென் அணியின் பயிற்சியாளர் ஜெபி அலோன்சோவை நியமிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கார்லோ அன்செலாட்டியின் மோசமான திட்டமிடல் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. இதனால்தான் இந்த மாற்றம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அணியை விட்டு விலகும் கார்லோ அன்செலாட்டி பிரேசில் தேசிய அணிக்கு பயிற்சியாளராக விருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜூன் மாதம் பிரேஸில் அணியில் கார்லோ அன்செலாட்டி இணைவதற்கான முடிவுகள் எடுத்துவிட்டதாகவும் விரைவில் இது குறித்த அறிவிப்பு வருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# அண்டர்சனுக்கு இங்கிலாந்தின் உயரிய விருது



இங்கிலாந்தின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனுக்கு அந்நாட்டின் மிக உயரிய விருது (கே.பி.இ.) அறிவிக்கப்பட்டுள்ளது. ஓர்டர் ஒஃப் த பிரிட்டிஷ் எம்பயர் எனப்படும் விருதில் கே.பி.இ என்பது நைட்வுட் என்ற விருதாகும். இங்கிலாந்து அரசு வழங்கும் விருதுகளில் இது உயர்ந்த வரிசையில் இருக்கிறது. 42 வயதாகும் ஜேம்ஸ் அண்டர்சன் டெஸ்ட்டில் இங்கிலாந்து சார்பில் அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் (704 விக்கெட்கள்) முதலிடத்தில் இருக்கிறார். மேலும் உலக அளவில் முத்தையா முரளிதரன் (800), ஷேர்ன் வோர்னுக்கு (708) அடுத்து மூன்றாவது இடத்தில் உள்ளார்.

கிரிக்கெட்டில் ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுவதாக இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது. இதற்கு முன்பாக முன்னாள் இங்கிலாந்து வீரர் மொயின் அலிக்கு ஓ.பி.இ. விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் சவாய் மான்சிங் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சாதனை சதம் அடித்த 14 வயது வளர்ந்து வரும் நட்சத்திர வீரர் வைபவ் சூர்யவன்ஷிக்கு பீகார் முதலமைச்சர் நிதீஷ் குமார் ரூ.10 இலட்சம் (இந்திய மதிப்பில்) பரிசுத்தொகை வழங்குவதாக அறிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★

ஜெர்மனியில் புகழ்பெற்ற புன்டெஸ்லிகா கால்பந்து தொடரில் இங்கிலாந்தின் ஹரி கேன் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார். பெயர்ன் மியூனிக் அணிக்காக விளையாடும் ஹரி கேன், 60 போட்டிகளில் 60 கோல்கள் 15 அசிஸ்ட்ஸ் செய்து அசத்தியுள்ளார். புன்டெஸ்லிகா கால்பந்து தொடரில் ஒரு வீரர் அதி வேகமாக 60 கோல்களை அடித்தவர்களுள் இவர்தான் முதலிடத்தில் இருக்கிறார். இதற்கு முன்பாக எர்லீங் ஹாலண்ட் 65 போட்டிகளில் 60 கோல்களை அடித்துள்ளார்.

★★★★★★★★★★★★★

ஆசிய கண்டத்தின் மிகப்பெரிய உதைபந்து போட்டியான ஆசியக்கிண்ண உதைபந்து தொடரின் 2031ஆம் ஆண்டுக்கான தொடரை நடத்த 7வது நாடாக இந்தியாவும் விண்ணப்பித்துள்ளது. அதன் படி அவுஸ்திரேலியா, தென்கொரியா, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தோனேஷியா, குவைத், இந்தியா நாடுகளும் கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவை இணைந்தும் விண்ணப்பித்துள்ளன. 2026-இல் போட்டியை நடத்தும் நாடு முடிவு செய்யப்படும். 2027ஆம் ஆண்டுக்கான தொடர் சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ளது.

★★★★★★★★★★★★★

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இருந்து வெளியாகும் கிரிக்கெட் உலகின் பைபிள் என்று போற்றப்படும் விஸ்டன் புத்தகத்தின் இந்த ஆண்டின் சிறந்த வீர, வீராங்கனை வரிசையில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா, இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அட்கின்சன், இங்கிலாந்து விக்கெட் கீப்பர் ஜேமி ஸ்மித், இங்கிலாந்து வீராங்கனை சோபி எக்லெஸ்டோன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

★★★★★★★★★★★★★

ஜெர்மனி ஜெயண்ட்ஸ் எனப்படும் பெயர்ன் மியூனிக் அணிக்காக விளையாடும் 35 வயதாகும் தோமஸ் முல்லர் புன்டஸ்லீகா தொடரில் 500 போட்டிகளில் விளையாடியுள்ளார். 2008ஆம் ஆண்டு பெயர் மியூனிக் அணிக்காக அறிமுகமாகி 25 ஆண்டுகளாக விளையாடிவரும் இவர் இந்த சீசனோடு அணியை விட்டுப் பிரிகிறார். அறிமுகமானதிலிருந்து 6,101 நாள்களுக்குப் பிறகு புன்டஸ்லீகா தொடரில் ஒரே அணிக்காக 500-ஆவது முறையாக விளையாடி சாதனை படைத்துள்ளார். ஏற்கனவே, பெயர் மியூனிக் அணிக்காக ஒருவர் அதிகமான போட்டிகளில் (748) விளையாடியதில் இவர்தான் முதலிடத்தில் இருக்கிறார்.

# இறுதிப்போட்டியில் இந்தியா இல்லாததால் நான்கு மில்லியன் பவுண்டுகள் வருமான இழப்பு




ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்திய அணி தகுதி பெறாததால் டிக்கெட் வருமானத்தில் சுமார் நான்கு மில்லியன் பவுண்டுகள் நஷ்டத்தை போட்டி அமைப்பாளர்கள் சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டி வரும் ஜூன் 11 முதல் 15 வரை லண்டனில் உள்ள புகழ்பெற்ற லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

ஆரம்பத்தில் போட்டி அமைப்பாளர்கள் டிக்கெட்டுகளை பிரீமியம் விகிதத்தில் விலை நிர்ணயம் செய்திருந்தனர். ஆனால் இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறாததால் மேரில்போன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி.) வருமான இழப்பை சந்திக்கவுள்ளது. மைதானத்துக்கு அதிக ரசிகர்களை இழுக்கும் விதமாக டிக்கெட் விலையை வெகுவாக குறைத்துள்ளது.

டிக்கெட்டுகள் தற்போது 40 பவுண்டுகள் முதல் 90 பவுண்டுகள் வரை விற்கப்படுகின்றன. இது முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட சுமார் 50 பவுண்டுகள் குறைவானவையாகும். விலை குறைப்புக்கு முன்னர் டிக்கெட் வாங்கிய எம்.சி.சி உறுப்பினர்களுக்கு பணம் திரும்ப வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல - 22

இஸ்லாமாபாத் VS பெஷாவர்

லாஹூர் - இரவு 8.30 மணி

**முடிவு**

போட்டி இல - 19

லாஹூர் - 209/6 (20)

இஸ்லாமாபாத் - 121/10 (16.5)

லாஹூர் 88 ஓட்டங்களினால் வெற்றி

# அபார வெற்றியுடன் சிம்பாப்வே டெஸ்ட் தொடரை சமப்படுத்திய பங்களாதேஷ்

சிம்பாப்பே அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பங்களாதேஷ் அணி இன்னிங்ஸ் மற்றும் 106 ஓட்டங்களினால் இமாலய வெற்றி பெற்று டெஸ்ட் தொடரை 1-1 என சமநிலையில் நிறைவு செய்தது.

சாட்டோகிராமில் நேற்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் சிம்பாப்பே 227 ஓட்டங்களுக்கு சுருண்டது. பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய பங்களாதேஷ் 444 ஓட்டங்கள் குவித்தது. ஷட்மான் இஸ்லாம் 120 ஓட்டங்களும் மெஹிதி ஹசன் மிராஸ் 104 ஓட்டங்களும் விளாசினர். இதன்மூலம் 217 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய சிம்பாப்பே, மெஹிதி ஹசன் மிராஸ் மற்றும் டைஜூல் இஸ்லாமின் மாயாஜால சுழலில் சிக்கி 111 ஓட்டங்களுக்கு சுருண்டு போனது.

இதனால் பங்களாதேஷ் இன்னிங்ஸ் மற்றும் 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என சமனில் முடிந்தது.

சதம் விளாசியதுடன் 5 விக்கெட்டுகளும் கைப்பற்றிய மெஹிதி ஹசன் மிராஸ் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் என இரு விருதுகளையும் வென்றார்.




# தொடர் சாதனைகள் படைத்துவரும் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயம்



(மீராவோடை நிருபர்)

நடைபெற்றுவரும் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலய 16 வயதுக்குட்பட்ட காரப்பந்தாட்ட அணியினர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 18 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணியினரும் கோட்டத்தில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், தங்களது திறமைகளை திறன்பட வெளிக்காட்டிய மாணவர்களுக்கும் மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும், ஒத்துழைப்புக்களை வழங்கிய பெற்றோர்களுக்கும் அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன்



(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் சம்பியன் கிண்ணம் - 2025 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

அட்டாளைச்சேனை, கோணாவத்தை கடற்கரை விளையாட்டு மைதானத்தில் கழகத் தலைவர் எஸ்.நாசர் தலைமையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

இறுதிப் போட்டி சமநிலையில் முடிவுற்ற காரணத்தினால் சுப்பர் ஓவர் வழங்கப்பட்டதில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழக அணியை 7 ஓட்டத்தினால் டீன் ஸ்டார் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல - 51

குஜராத் VS ஹைதராபாத்

அஹமதாபாத் - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல - 49

சென்னை - 190/10 (19.1)

பஞ்சாப் - 194/6 (19.4)

பஞ்சாப் 4 விக்கெட்களினால் வெற்றி

தற்போது விற்பனையில்...

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான

ஜீனியர் தமிழன்

மே மாத சஞ்சிகைகள்

பாடசாலை பாடத்திட்டத்தின்படி,
தவணைகளின் அடிப்படையில்,
தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு
வெளிவருகின்றன.




மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07